



34 ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com






நதி: 34 | பாலம்: 09 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 01, 2024

# ஒவ்வொரு தலைமுறைக்கும் நியாயம்!

கனடிய மத்திய அரசின் 2024-2025 ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் கிறிஸ்ரியா ஃப்ரீலண்ட் (Chrystia Freeland) ஏப்ரல் 16, 2024 ஆம் அன்று சமர்ப்பித்தார். இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திற்கு ஒவ்வொரு தலைமுறைக்கும் நியாயம் வழங்குவதற்கான திட்டம் எனப் பெயரிடப்பட்டிருந்தது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் செலவிடுவதற்காக $52.9 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2024-2025ஆம் நிதியாண்டிற்கான துண்டுவிழும் தொகையாக $39.8 பில்லியன் இருக்கிறது. 2025-2026ஆம் நிதியாண்டின் துண்டுவிழும் தொகையாக $38.9 பில்லியன் இருக்கிறது. இவ்வாறு துண்டுவிழும் தொகை வரவு-செலவுத் திட்டத்தில் இனிவரும் நிதியாண்டுகளில் படிப்படியாக சிறிதளவு குறைந்துகொண்டு சென்று 2028-2029ஆம் நிதியாண்டில் துண்டுவிழும் தொகையாக $20 பில்லியனை அடைகிறது.

மத்திய அரசு தனது எதிர்பார்த்த துண்டுவிழும் தொகையான $40.1 பில்லியனை 2023-2024ஆம் நிதியாண்டில் அடைந்ததும், கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையேயான வீதத்தைக் குறைத்ததும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஆனாலும், மத்திய அரசு எப்போது தனது வரவு-செலவுத் திட்டத்தைச் சமநிலைப் படுத்தும் எனக் குறிப்பிடவில்லை.

புகையிலைப் பொருட்கள் மற்றும் புகைத்தலுக்குப் பாவிக்கும் சாதனங்கள் மீதான வரி அதிகரிப்பு மற்றும் செல்வந்தர்கள் மீதான வரி அதிகரிப்பு மூலம் அரசிற்குப் புதிய வருவாயாக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் $20 பில்லியன் எதிர்பார்க்கப் படுகிறது. "எமது வருங்கால சந்ததியின் மீது கடன் சுமையைச் சுமத்தாமல் நாட்டில் உள்ள பெரும் செல்வந்தர்களை சிறிது அதிக வரி கட்டுமாறு எமது அரசு கேட்கிறது" என நிதியமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

மூலதன ஆதாயமாக (Capital gains) ஓர் ஆண்டில் $250,000இற்கு மேல் வருமானம் பெறுவோர் ஜூன் 25, 2024இற்குப் பின்னர் தமது வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கிற்கு வரி செலுத்த வேண்டும். தற்போது அவர்கள் தங்கள் வருமானத்தில் இரண்டில் ஒரு பங்கிற்கே வரி செலுத்தி வருகின்றனர். இது தனி நபர்களுக்கும், கனடிய நிறுவனங்களுக்கும் அமல்படுத்தப்படும். இப்புதிய வரி விதிப்பு கனடாவின் பெரும் செல்வந்தர்களான 0.13%ஆனோரையும், 12%ஆன நிறுவனங்களையும் மட்டுமே பாதிக்கும்.



2031ஆம் ஆண்டு பூர்த்தியடைவதற்கு இடையில் நாடு முழுவதும் 3.9 மில்லியன் புதிய வீடுகள் அமைக்கக் கனடிய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுவோருக்கு வழங்கும் மூலதனச் செலவுக் கொடுப்பனவு வீதத்தை (Capital cost allowance rate) 4%இல் இருந்து 10% ஆக அதிகரிப்பதன்மூலம் அடுக்கு மாடிக் குடியிருப்புகளைக் கட்டும் நிறுவனங்களுக்கு அதிக வரி விலக்குகளை அரசு அனுமதிக்கிறது.

புதிய வீடுகளை முதன்முறையாக வாங்குவோருக்கு அடமானக் காலத்தை 30 ஆண்டுகள்வரை நீடிக்கிறது.

அரசிடம் மேலதிகமாக உள்ள நிலங்களை நீண்டகாலக் குத்தகைக்கு வீடுகள் அமைக்கும் நிறுவனங்களுக்குக் கொடுக்கிறது. தற்போது அரசிடம் மேலதிகமாக உள்ள 'Canada Post' கட்டிடங்களையும், பாதுகாப்பு அமைச்சிற்குரிய மேலதிக கட்டிடங்களையும் வீடுகள் அமைக்கும் நிறுவனங்களுக்குக் கொடுக்கிறது.

வீடற்ற மக்களுக்கானதும் மற்றும் பொது இடங்களில் கூடாரம் அமைத்துத் தங்கும் மக்களுக்கானதுமான உடனடிப் பிரச்சினையைத் தீர்க்க அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மத்திய அரசு $250 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

சிகரட் பெட்டி (Carton of Cigarettes) ஒன்றின் விலையை $4ஆல் அதிகரிப்பதன் மூலமும் புகைத்தலுக்குப் பாவிக்கும் சாதனங்கள் (Vape supplies)மீது 12% வரிவிதிப்பை அதிகரிப்பதன் மூலமும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் மத்திய அரசு $1.7 பில்லியனை மேலதிக வருமானமாகப் பெறுகிறது. முன்பள்ளிச் சிறுவர்களைப் பராமரிக்கும் கற்கைநெறி பயிலும் மாணவர்களுக்கான கடனைத் தள்ளுபடி செய்ய மத்திய அரசு அடுத்த நான்கு ஆண்டுகளில் $48 மில்லியனையும், அதன்பின்னர் $15.8 மில்லியனையும் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

சுகாதார சேவைகளை வழங்கும் கற்கை நெறியிலும் மாணவர்களுக்கான கடனை, சுகாதார நிபுணர் (Hygienists), மருந்தாளர் (Pharmacists) மற்றும் சமூகப் பணியாளர் (Social Workers) கற்கை நெறி பயிலும் மாணவர்களுக்கான கடன் உட்பட தள்ளுபடி செய்ய மத்திய அரசு அடுத்த நான்கு ஆண்டுகளில் $253.8 மில்லியனையும் அதன்பின்னர் $84.3 மில்லியனையும் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

வாகனத் திருட்டு மற்றும் திட்டமிட்டு செய்யப்படும் குற்றங்களுக்கு (Organized crime) மேலதிக தண்டனை வழங்க மத்திய அரசு குற்றவியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவுள்ளது. வாகனங்களைத் திருடப் பயன்படுத்தப்படும் மின்னணுச் சாதனங்களை வைத்திருப்பதையும் அவற்றை விநியோகிப்பதையும் குற்றச் செயலாக்க அரசு திட்டமிட்டுள்ளது.

மத்திய அரசு ஒரு புதிய ஒன்லைன் தீங்குகள் சட்டத்தை (Online Harms Act) உருவாக்குவதற்கு ஓர் அமைப்பை உருவாக்க அடுத்த ஐந்து ஆண்டுகளில் $52 மில்லியனை செலவழிக்கத் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் ஒன்லைன் தளங்கள் பொறுப்புடன் செயல்படுதலும் Digital பாதுகாப்பும் உறுதி செய்யப்படும். வெறுப்புணர்வால் செயற்படும் குற்றங்களைக் கட்டுப்படுத்தவும் அதை எதிர்த்துப் போராடவும் மத்திய அரசு புதிய பண முதலீட்டை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளது.

சமூகங்களுக்கு இது தொடர்பாக அறிவுரைகள் வழங்கவும், வெறுப்புணர்வுக்கு எதிராகப் பயிற்சியளிக்கவும் மற்றும் இவற்றால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவு வழங்கவும் மத்திய அரசு $273.6 மில்லியனை அடுத்த ஆறு ஆண்டு

தொடர்ச்சி 05 பக்கம்


















Tamil Genocide Remembrance Day
On the 15th anniversary of Mullivaikkal,
Let us honour and remember lives lost, and
Commit to justice, accountability, and peace.
தமிழ் இனப்படுகொலை நினைவு தினம்
முள்ளிவாய்க்கால் 15ஆம் ஆண்டு நினைவு தினத்தில்,நாம் இழந்த உயிர்களுக்கு மதிப்பளித்து அவர்களை நினைவு கூர்வோம்!
நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் அமைதிக்காக எம்மை அர்ப்பணிப்போம்!
Member of Parliament | Scarborough North
SHAUN CHEN
4386 Sheppard Avenue East, Unit E
Scarborough, Ontario M1S 1T8
416-321-CHEN (2436)
info@shaunchen.com
ShaunChenMP
shaunchenmp
Shaun_Chen
www.shaunchen.com


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

# தேர்தலுக்கான பலப்பரீட்சை

## - அரவின் -

இலங்கையில் ஜனாதிபதி தேர்தலுக்கான காலஎல்லை நெருங்க நெருங்க அரசியல் முனைப்புகளும் தீவிரம் பெறத் தொடங்கி யிருக்கின்றன.

ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின்படி செப்ரெம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கு முன்னதாக, ஓகஸ்ற் மாதம் தேர்தலுக் கான அறிவிப்பு வெளியாகும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் கூறுகின்றன. இவ்வாறான நிலையில், இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியைக் கைப் பற்றுவதற்கான போட்டி ஏற்கனவே தொடங்கி விட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக சஜித் பிரேமதாச தீர்மானிக்கப்பட்டு விட்டார். தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக அனுரகுமார திசநாயக்க போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான கட்சிகளின் சார்பில், இவர்கள் இருவர் தவிர, ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவும் போட்டியிடவுள்ளார். அதனை அவர் அண்மையில் பசில் ராஜபக்சவுடன் நடத்திய சந்திப்பின்போது குறிப்பிட்டிருக் கிறார். இவர்கள் தவிர, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் வேட்பாளரை நிறுத்தப் போவதாகக் கூறுகிறது. ஆனால் உள்ளக குழப்பங்களால் தீர்க்கமான நிலைப்பாடு எடுக்கப்படவில்லை.

மைத்திரிபால சிறிசேன, தயாசிறி ஜய சேகர, ஜனக ரத்நாயக்க, திலித் ஜயவீர என்று ஜனாதிபதி தேர்தல் கனவுடன் பலபேர் காத்திருக்கின்றனர். இவர்களுக்கு மத்தியில், மகிந்த ராஜபக்சவின் தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு என்ன என்ற கேள்வி இன்றுவரை நீடித்துக் கொண்டிருக்கிறது.

2022இல் கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்துக்கு எதிராக வெடித்த மக்கள் புரட்சிக்குப் பின்னர், பொதுஜன பெரமுன இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக நிமிரத் தொடங்கியிருக்கிறது. அப்போது சிங்கள மக்களால் ஓட ஓட துரத்தி அடிக்கப்பட்ட இந்தக் கட்சியின் தலைவர் களும், பிரமுகர்களும் - இப்போதும் பதுங்கிப் பதுங்கித்தான் பொது இடங்களுக்குச் செல்கின்றனர்.

உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் பதுங்கி யிருந்த ராஜபக்சவினர் இப்போது வெளியே வந்து தலைகாட்டத் தொடங்கி யிருக்கின்றனர். ஆனாலும், அவர்களுக்கு தங்களின் மீது முழுமையான நம்பிக்கை யில்லை. ஜனாதிபதி தேர்தலில், கள மிறங்கி, தோல்வியடைந்தால், தங்களின் எதிர்காலம் சூனிய நிலைக்குத் தள்ளப் படும் என்ற அச்சம் அவர்களிடம் இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அது போல, ராஜபக்ச குடும்பத்தைச் சேராத எவரையும் அவர்கள், ஜனாதிபதி வேட் பாளராக நிறுத்தத் தயாராக இல்லை. தனது அண்ணன் சமல் ராஜபக்சவை நிறுத்துவதற்குக்கூட மகிந்த ராஜபக்ச தயாராக இல்லை. ஏனென்றால், அது மகிந்தவின் அரசியல் வாரிசான நாமல் ராஜபக்சவின் அரசியல் எதிர்காலத்தைப் பாதிக்கும். நாமல் இன்னமும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அளவுக்குத் தகுதி பெறவில்லை என்று மகிந்தவே ஒப்புக்கொண்டு விட்டார்.

நாமலுக்கு சவால் விடக்கூடிய எவரும் கட்சிக்குள் தலையெடுக்கக் கூடாது என்ப தால், இந்த விவகாரத்தினால் தங்களுக் குள் முரண்பாடு வந்து விடக்கூடாது என்பதால், இந்த ஜனாதிபதி தேர்தலில் இருந்து ஒதுங்கிக் கொள்வதை சிறந்த அரசியல் உத்தியாகப் பார்க்கிறது ராஜபக்ச குடும்பம். அதனையும் தங்களின் அரசியல் வெற்றியாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றனர்.

ராஜபக்சவினரின் புண்ணியத்தில் ஜனாதி பதியாக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, மீண்டும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டி யிடப் போகின்றபோதும், அவரது தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பலமான நிலையில் இல்லை. ஐதேகவின் சார்பில் போட்டியிட்டால் ரணில் விக்கிரம சிங்கவினால் வெற்றிபெற முடியாது. அதனால் பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் வெற்றியைத் தக்கவைக்க அவர் முற்படுகிறார்.

பொதுஜன பெரமுனவுக்கும்கூட ரணில் விக்கிரமசிங்கவைப்போல, கவசமாக இருக்கக்கூடிய வேறெவரும் கிடையாது. இவரால் நாமலின் அரசியலுக்கு ஆபத்து வராது. அடுத்த முறை ரணில் போட்டியிட முடியாது, ரணிலுக்கு வாரிசு கிடையாது என்பதால், மகிந்தவுக்குப் பின்னர் நாமல் போல, ரணிலுக்குப் பிறகு வேறெவரும் வரப் போவதும் இல்லை.

ரணிலுக்கும் ராஜபக்ச தரப்புக்கும், உள்ள சில பொதுவான இலக்குகள் காரணமாக, அவர்கள் ஜனாதிபதி தேர்தலை ஒன்றிணைந்து எதிர்கொள்ளத் தயாராகி வருகின்றனர். இதுதொடர்பான பூர்வாங்க பேச்சுக்கள் தொடங்கப்பட்டு விட்டன. பசிலும் ரணிலும் அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொள்கின்றனர்.



கடைசியாக நடந்த பேச்சுக்களில் இணக்கப்பாடுகள் பல ஏற்பட்டிருக்கின்றன. ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு பொது ஜனபெரமுன ஆதரவு அளிப்பதற்கு இணங்கியிருக்கிறது. பதிலுக்கு ரணில் ஜனாதிபதியானதும் பசிலை பிரதமராக நியமிக்க வேண்டும், 3 மாதங்களுக்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்று நிபந்தனைகள் விதிக்கப் பட்டிருக்கின்றன. ஆக பொதுஜன பெர முனவின் ஆதரவுடன் ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவ தற்கான வாய்ப்புகள் அதிகரித்திருக்கின்றன.

இலங்கையின் அரசியலில் அடுத்து வரும் வாரங்களும் மாதங்களும் பரபரப்பானதாக - திடீர் திருப்பங்கள் நிறைந்ததாக இருக்கப் போவது உறுதி. இந்தப் பரபரப்பு மேதினக் கொண்டாட்டங்களுடன் சூடு பிடிக்கப் போகிறது. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும், அடுத்த ஜனாதிபதியை தீர்மானிக்கும் நிலையில் இருக்க விரும்பும் கட்சிகளும், இந்த மே தினத்தை தங்களின் ஒரு முக்கியமான தளமாக மாற்றியுள்ளன. பெருமெடுப்பில் மே தின நிகழ்வுகளை நடத்தி மக்கள் மத்தியில் தங்களுக்குள்ள செல்வாக்கை வெளிப்படுத்த முற்படுகின்றன.

பொதுஜன பெரமுன தங்களின் மீள் எழுச்சியை உறுதிப்படுத்தவும், ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் தங்களின் பலத்தைக் காட்டவும், ஐக்கிய தேசியக் கட்சி, தங்களாலும் மக்களைத் திரட்ட முடியும் என்று நிரூபிக்கவும்- இந்த மேதினத்தைப் பயன்படுத்துகின்றன.

தொழிலாளர் தினமாக இருந்தாலும், மே தினத்தை இலங்கையின் அரசியல் கட்சிகள் தங்களின் பலப்பரீட்சைக்குத்தான் பயன்படுத்தி வந்திருக்கின்றன. அதுவும் இந்தமுறை ஜனாதிபதி தேர்தலுக்கு முந்திய மே தினம் என்பதால், இன்னும் கூடுதல் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. மே தினப் பேரணிகளின் ஊடாக மக்களின் செல்வாக்கை அறிந்து கொள்ளலாம் என்றும் அரசியல் கட்சிகள் எதிர் பார்க்கின்றன.

கடந்த 2020 நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், மக்களின் மனநிலையை வெளிப் படுத்தக் கூடிய எந்த தேர்தல்களும் நடத்தப்படவில்லை. எனவே, இந்த மே தினத்தன்று திரளும் மக்கள் கூட்டத்தை வைத்து, அவர்களின் மனநிலையை அறிந்து கொள்ளலாம் என்பது அரசியல் கட்சிகளின் திட்டம். ஆனால், இலங்கை யில் மே தினப் பேரணிகளில் அல்லது தேர்தல் பிரசாரப் பேரணிகளில் திரளு கின்ற மக்கள் கூட்டத்தை வைத்துக் கொண்டு, யாருக்குச் செல்வாக்கு அதிகம் என்று தீர்மானிக்க முடியாது.

கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சஜித் பிரேமதாசவின் அரசியல் பேரணி யில் திரண்ட மக்கள் தொகை, அவருக்கு வெற்றி வாய்ப்பு இருக்கிறது என்ற கருத்தையே தோற்றுவித்தது. ஆனால் அவர், 14 இலட்சம் வாக்குகளால் தோற் கடிக்கப்பட்டார். ஆனாலும், எந்தக் கட்சி யும் இந்தப் படிப்பினைகளுக்கு அப்பால், மக்கள் கூட்டத்தை திரட்டி பலப்பரீட்சை நடத்துவதில்தான் கவனம் செலுத்துகின் றன. இந்தப் பலப்பரீட்சையில் வெற்றி பெறப் போகிறவர் யார் என்பது, மே தினப் பேரணிகளுக்குப் பின்னர் தெரியவரப் போவதில்லை, அது ஜனாதிபதி தேர்தல் முடிவுகளில்தான் உறுதியாக தெரியவரும்.

விளம்பரம்
VLAMBARAM
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave. E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228
Mr. S.F. Xavier (Teacher)

# ஒவ்வொரு...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

களுக்கு ஒதுக்கியுள்ளது.



மதசார்பான இடங்களுக்கும், சமூகங்களுக்கும் பாதுகாப்பு வழங்க உள்கட்டமைப்புத் திட்டங்கள் அமைக்க அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு $32 மில்லியனும் அதன்பின்னர் ஆண்டு ஒன்றுக்கு $11 மில்லியனும் வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

யூத விரோதத்தை (Antisemitism) எதிர்த்துப் போராடுவதற்கும், யூத அழிவு நினைவுகளைப் பாதுகாக்கவும் (Preserving Holocaust Remberance) மற்றும் இஸ்லாமிய விரோதத்தை (Islamophobia) எதிர்த்துப் போராடுவதற்குமாக ஒவ்வொரு சிறப்புப் பிரதிநிதிகளை நியமித்துப் பயிற்சி வழங்க அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு $7.3 மில்லியனை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

பசுமையான முறையில் வீடுகள் அமைக்கவும் (Greener homes) மற்றும் ஆற்றல் திறன்மிக்க திட்டங்களை உருவாக்கவும் மத்திய அரசு $900 மில்லியனை முதலீடு செய்கிறது. இந்த முதலீடு ஆறு ஆண்டுகளுக்குப் பயன்படுத்தப்படும்.

தேசிய வெள்ளக் காப்பீட்டுத் திட்டத்தை மத்திய அரசு 2025ஆம் ஆண்டுக்குள் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் $15 மில்லியன் மத்திய அரசு கனடிய அடமானம் மற்றும் வீட்டுவசதி நிறுவனத்திற்கு (CMHC) ஒதுக்கியுள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மத்திய அரசு பல புதிய பூங்காங்கள் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புப் பிரதேசங்களை பிரிட்டிஷ் கொலம்பியா, பிரின்ஸ் எட்வேர்ட் தீவு மற்றும் ஒன்ராறியோவில் உள்ள வின்சர் பிரதேசத்தில் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

மின்சார வாகனங்களின் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் கட்டிடங்களைக் கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு அப்பகுதிக்குரிய விலைக்கு 10% வரி விலக்கு அடுத்த 10 ஆண்டுகளுக்கு மத்திய அரசு வழங்க உள்ளது.

சுத்தமான மின்சாரம் (Clean electricity)




பாவிக்கும் உபகரணங்களில் முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு அல்லது தமது பழைய உபகரணங்களைச் சுத்தமான மின்சாரம் பாவிக்கும் உபகரணங்களாக மறுசீரமைக்கும் நிறுவனங்களுக்கு இவ்வாறு முதலீடு செய்யும் காலத்தில் அப்பணத்திற்கு 15% வரிவிலக்கு மத்திய அரசு வழங்கும்.

இளையோருக்கு மனநலப் பாதுகாப்பு அளிக்க சமூக சுகாதார நிறுவனங்களுக்கு மத்திய அரசு $500 மில்லியனை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளது.

600,000 சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு 2019ஆம் ஆண்டில் இருந்து எரிபொருள் கட்டண வரிவிலக்காக $2.5 பில்லியனை மத்திய அரசு வழங்க உள்ளது.
மத்திய அரசின் புதிய மருந்தகத் திட்டத்தின் (Pharmacare plan) ஒரு பகுதியான கருத்தடைகள் மற்றும் நீரிழிவு மருந்துகள் வழங்குவதற்கு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு $1.5 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் முதற் குடியினரின் சமூகங்களிற்கு Opioid போதை மருந்தின் நெருக்கடியைத் தீர்க்க உதவும் அவசர சிகிச்சைகளை வழங்க அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு மத்திய அரசு $150 மில்லியனை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளது.

கனடா ஊனமுற்றோர் நலன் (Canada Disability Benefit) மற்றும் இவர்கள் தொடர்பான செலவுகளுக்கு வழங்க மத்திய அரசு அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு $6.1 பில்லியனையும் பின்னர் ஆண்டுதோறும் $1.4 பில்லியனை ஒதுக்கியுள்ளது.

இளையோருக்கு மனநலப் பாதுகாப்பு அளிக்க சமூக சுகாதார நிறுவனங்களுக்கு மத்திய அரசு $500 மில்லியனை இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளது.

மத்திய அரசு தனது கட்டுப்பாட்டிற்குள் உள்ள பணியாட்களுக்கு அவர்கள்



வேலை செய்யாத நேரத்தில் பணியிடத்துடனான தொடர்புகளைத் துண்டிக்கும் உரிமையை (Turn off office computers and cell phones) வழங்கும் புதிய சட்டமூலத்தை அமல்படுத்த உறுதி பூண்டுள்ளது.

முதற் குடிமக்களுக்கான மனநலச் சேவைகளை வழங்க மத்திய அரசு $600 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

கனடா வரும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு (Asylum Claimants) வீட்டு உதவித் திட்டத்தை வழங்க அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு மத்திய அரசு $1.1பில்லியனை ஒதுக்கியுள்ளது. குடிவரவு மற்றும் அகதிகள் சட்ட உதவிக்காக மத்திய அரசு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு $274 மில்லியனை ஒதுக்கியுள்ளது.
மத்திய அரசு புகலிடக் கோரிக்கைகளை விசாரிக்கும் அமைப்பு முறையை சீராக்கவும், இதன் செயல்முறைகளை நெறிப்படுத்தவும், நாட்டைவிட்டு அகற்றும் செயல்முறைகளை நடைமுறைப்படுத்தவும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் $743.5 மில்லியனை முதலிடத் திட்டமிட்டுள்ளது.

கட்டுமானத் தொழில் மற்றும் சுகாதார பராமரிப்புச் சேவை ஆகியவற்றிற்குத் தேவைப்படும் தொழிலாளர்களுக்கு உதவுவதற்காக வெளிநாடுகளில் கல்விபயின்று சான்றிதழ் பெற்றுள்ளவர்களை அங்கீகரிக்க உதவும் திட்டத்தை மேம்படுத்த அடுத்த இரண்டு ஆண்டுகளில் மத்திய அரசு $50 மில்லியனை முதலிடுகிறது.

வெளிநாடுகளில் கல்வி பயின்று சான்றிதழ் பெற்றுள்ள சுகாதார சேவை பாதுகாப்பு நிபுணர்களுக்கு (Professionals) பயிற்சியளிக்க மத்திய அரசு $77.1 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

மேலதிகமாக 400,000 பாடசாலைச் சிறார்களுக்கு உணவு வழங்குவதற்காக தேசிய பாடசாலை உணவுத்திட்டத்திற்கு மத்திய அரசு அடுத்த ஐந்து ஆண்டு களுக்கு $1 பில்லியனை செலவழிக்க உள்ளது.

அடுத்த நான்கு ஆண்டுகளில் மத்திய அரசு பணியாட்களின் எண்ணிக்கையை ஓய்வு பெறுவோரின் இடத்தை நிரப்பாமல் விடுவதன்மூலம் 5,000பேர்களால் குறைக்க முடிவெடுத்துள்ளது.




## மாணவர் எழுச்சி

ஆதவனின் எழுச்சியினால் இதழவிழ்க்கும் தாமரையாய்
மதிவளர்க்கும் ஆசானின் மலரடியும் தொழுது கொண்டு
சூதகன்ற உண்மையொளி சுடர்விட்டு நெஞ்சத்தில்
சோதியாய்ப் பரிணமிக்க மாணவரை வாழ்த்துகின்றோம்

அறம்கூறும் நல்லுலகம் மதிக்கின்ற ஒழுக்கமுடன்
ஆகமங்கள் கவின்கலைகள் விஞ்ஞான நுட்பங்கள்
நிறைவுறவே பயின்றதனால் நிபுணத்துவம் மலர்ந்திடவே
நாடாளும் திறமைபெற மாணவரை வாழ்த்துகின்றோம்

ஆதரவுக் கேங்குகின்ற அயலவர்க்குக் கைகொடுத்து
அரும்பணியி லுவகையுறும் அருளாள ராய்வளர்ந்து
வேதனையால் வெந்தழியும் நெஞ்சங்கட் குறுதுணையாய்
வேட்கையுடன் பணிபுரிய மாணவரை வாழ்த்துகின்றோம்

தாய்நாட்டுப் பற்றுணர்வு வளருகின்ற மனோபலத்தால்
சேயாகி அன்னைமண் செழிக்கவே புரக்கின்ற
மாயாத மாண்பினிலே மனமுவந்து துணிந்துநின்று
ஓயாது உழைத்திடவே மாணவரை வாழ்த்துகின்றோம்



தன்மானம் உயிரென்ற தாற்பரியம் உணர்ந்தவராய்
முன்னாளில் மூத்தவர்கள் நாட்டிவைத்த பெரும்புகழை
எந்நாளும் உறுதியுடன் நெஞ்சத்திற் சுமந்தவராய்
இந்நாளில் நிலைநிறுத்த மாணவரை வாழ்த்துகின்றோம்.

மாரீசன்

# கைநழுவும் தமிழரின் வாய்ப்பு

– முகிலன் –

இலங்கையில் இன்னும் சில வாரங்களில் ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், கொழும்பு அரசியலில் இப்போதே பரபரப்பு தொற்றிக்கொண்டு விட்டது. ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில், ஜனாதிபதி தேர்தலை ஒட்டிய நகர்வுகள் பெரும்பாலும் மந்தமாகவே காணப்படுகிறது.

கடந்த பல வாரங்களாக ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வதற்கான வியூகங்கள் பற்றி பல்வேறு தரப்புகளும் பல்வேறு கருத்துகளை வெளியிடுகின்றன. இதனைச் சார்ந்த கருத்தரங்குகள், கூட்டங்கள், பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

திடீரென வேகம் எடுப்பதும், திடீரென நின்று போவதுமான இந்த நகர்வுகள் அமைந்திருக்கின்றன. இந்த விவகாரம் சார்ந்து, தொடர்ச்சியானதொரு நகர்வை முன்னெடுக்கும் உற்சாகம், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளிடமும் இல்லை. அவற்றை இந்த விடயம் சார்ந்து முன்நோக்கித் தள்ளிச் செல்லும் வலுவான சிவில் சமூக கட்டமைப்பும் தமிழர் தரப்பில் இல்லை. இந்தக் குறைபாடுகளாலும், தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் கட்சிகள் மத்தியில் காணப்படுகின்ற முரண்பாடுகளாலும், ஜனாதிபதி தேர்தலை எப்படி எதிர்கொள்வது, இந்த தேர்தலை தமிழ் மக்களின் நலனுக்கு சாதகமான முறையில் எவ்வாறு நகர்த்துவது என்ற தீர்க்கமான முடிவு ஒன்றுக்குள் நகர முடியாதிருக்கிறது.

முள்ளிவாய்க்கால் இறுதிப் போருக்குப் பின்னர், அதாவது விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில், தமிழ்த் தேசிய அரசியல் ஓர் இக்கட்டான நிலையை-கிட்டத்தட்ட ஒரு முடக்க நிலையை அடைந்திருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உடைவினால், கட்சிகள் சிதறிப் போயிருப்பது, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பெயரில் புதிய கூட்டணி உருவான போதும், அதன் செயற்பாடுகளில் வேகமோ, தெளிவான இலக்கோ இல்லாதிருப்பது, கட்சிகளுக்குள் தோன்றியிருக்கும் உள்முரண்பாடுகள் போன்ற பல காரணிகளால், இந்த முடக்க நிலை தோற்றம் பெற்றிருக்கிறது.

இந்த தேக்கநிலையில் இருந்து தமிழ்த் தேசிய அரசியலை நெம்புகோல் கொண்டு நிமிர்த்தக்கூடிய, ஆற்றல் வாய்ந்த கட்டமைப்பு அல்லது தனிநபர்கள் யாரும் இல்லாமை தமிழர் தரப்பின் முக்கியமானதொரு பலவீனம். இந்தச் சூழலை பல்வேறு சக்திகளும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு முற்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

கொழும்பு அரசியலைப் பரபரப்புக்குள்ளாகியிருக்கும் ஜனாதிபதி தேர்தல் விவகாரம், தமிழ் அரசியலில் எவ்வாறு கையாளப் படப் போகிறது என்ற கேள்வி இன்னமும் நீடிக்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் இந்த முறை போட்டியிடவுள்ள பிரதான வேட்பாளர்களான, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுர குமார திசநாயக்க ஆகிய மூவருமே ஜனாதிபதி தேர்தலுக்கு புதுமுகங்கள் அல்ல. ரணில் இரண்டு முறை போட்டியிட்டு தோல்வி கண்டவர். சஜித்தும், அனுரவும் தலா ஒருமுறை போட்டியிட்டவர்கள். எனவே இந்த ஜனாதிபதி தேர்தலில் யாருக்குச் சார்பாகவும் பெரிய அலை வீசுவதற்கான வாய்ப்புக் குறைவு.

கடந்தமுறை கோட்டா அலை வீசியதால், தமிழ் மக்களின் வாக்குகள் கவனிக்கப்படாமல் போனது. அதுபோன்ற நிலை இந்த முறை இல்லாததால், தமிழ் மக்களின் வாக்குகள் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கக் கூடும். இந்த நிலையில், தமிழ் மக்களின் வாக்குகளை எந்த அடிப்படையில் ஒருங்கிணைப்பது என்பதில் குழப்பங்கள் தோன்றியிருக்கின்றன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தேர்தல் புறக்கணிப்பை வலியுறுத்துகிறது.

ஐந்து கட்சிகளின் கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி என்பன தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தி, அவருக்கு வாக்களிக்கச் செய்வதன்மூலம், தமிழ்மக்களின் பிரச்சினையை வெளிக்கொண்டு வரலாம், தமிழர் பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்தலாம் என்கிறது.

பிரதான தமிழ்க் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஒரு பகுதியினரும் பொது வேட்பாளர் திட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் நிலையில், இன்னொரு தரப்பு அதனை எதிர்க்கிறது. அவர்கள், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பேரம் பேசும் எண்ணத்துடன் இருப்பதாகத் தெரிகிறது. இந்த மூன்று தெரிவுகளுக்கும் மத்தியில், இணக்கப் பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முயன்றவர்கள் எல்லோருமே, இவர்கள் சரிவர மாட்டார்கள் என்று ஒதுங்கிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கின்றனர். அதற்குக் காரணம், ஒவ்வொரு தரப்பும் தங்களின் நிலைப்பாடு தான் சரி என நினைக்கிறது. தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று, பிடிச்சிராவித்தனமாக இருக்கிறது. இதனால், ஒட்டுமொத்த தமிழர்களையும் ஒன்று திரட்டி பலத்தைக் காட்டும் வாய்ப்பை உருவாக்கிக் கொள்ளலாம் என்று கனவு கண்டவர்கள் இப்போது கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றனர்.

2010 ஜனாதிபதி தேர்தலில், மகிந்தவைத் தோற்கடிப்பதற்காக சரத் பொன்சேகாவை ஆதரித்தது கூட்டமைப்பு. அந்த வியூகம் பிழைத்துப் போனது.

2015இல், மகிந்தவை தோற்கடிப்பதற்காக மைத்திரியை கூட்டமைப்பு ஆதரித்தது. மைத்திரி வென்ற போதும், அவருடன் எழுத்துமூலம் பேரம் பேசி ஒப்பந்தம் செய்து கொள்ளாததால், அந்த வியூகமும் பிழைத்துப் போனது.

2019இல், கோட்டாவைத் தோற்கடிப்பதற்காக சஜித்துடன் கைகோர்த்தது. ஆனால் கோட்டாவின் சிங்களப் பேரெழுச்சிக்கு முன் அவரால் தாக்குப்பிடிக்க முடியாமல், போனது. இந்த இடத்திலும் தமிழரின் வியூகம் பிழைத்துப் போனது. ஆக, கடந்த 3 ஜனாதிபதி தேர்தல்களிலும் தமிழர் தரப்பு, ஏதோ ஒரு பிரதான சிங்கள வேட்பாளருக்கு ஆதரவு வழங்கி அல்லது அவருடன் பேரம் பேச முயன்றும், தமிழர்களுக்கு எதையும் பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

2005இல் விடுதலைப் புலிகள் இருந்த காலகட்டத்தில், தேர்தல் புறக்கணிப்பு வியூகம் வகுக்கப்பட்டது. அது ரணிலுக்குப் பாடம் கற்பிக்கும் திட்டம். அந்த வியூகத்தினால் ரணில் தோற்கடிக்கப்பட்டார், ஆனால் தமிழர்களுக்கு அதனால் கிடைத்த பலாபலன் என்னவென்பது அனைவருக்கும் தெரியும். அந்த வியூகம் சரியா-தவறா என்ற கேள்விகள் இன்றைக்கும் நீடிக்கின்றன.

கடந்த இரண்டு தசாப்தங்களில் 4 ஜனாதிபதி தேர்தல்களில் தமிழர் தரப்பினால் வகுக்கப்பட்ட வியூகங்கள் உரிய பலனைத் தராதநிலையில் தான், இதுவரை தமிழர் தரப்பினால் பயன்படுத்தப்படாத, அஸ்திரத்தை பயன்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அதுதான் தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்தும் திட்டம். அந்த அஸ்திரத்தை சரியாகக் கையாள வேண்டும். அதனை எல்லாத் தரப்பினரும் இணைந்தே, பயன்படுத்த வேண்டும். கொஞ்சம் பிசகினாலும்கூட அந்த வியூகமும் சரிப்பட்டு வராது என்ற நிலைக்குத் தமிழினம் தள்ளப்பட்டு விடும்.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் மத்தியில் உள்ள முரண்பாடுகள் தான் சக்திவாய்ந்த ஒரு அஸ்திரத்தை கையில் எடுக்கும் வாய்ப்பைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலை

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

# இலங்கைத் தமிழர் இடப்பெயர்வும் கல்வியும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

இலங்கைத் தமிழரின் வாழ்வு மற்றும் வளர்ச்சியில் கல்விச் செயல்முறை தனித்தன்மையான பங்கினை வரலாறு முழுவதும் வகித்து வருகின்றது. தமிழர்களது சமூகவலைப் பின்னலில் கல்விக் கொள்கைகள், கல்வி வாய்ப்புகள், கல்வி நிறுவனங்கள், கல்வித் தொழில்நுட்பங்கள், கல்விக்குரிய மொழி மூலம், கல்வியை சான்றிதழ்ப்படுத்தல்கள், தொழில்வாண்மைக்குரிய கல்வி, பிற நாட்டுக்குடியுரிமைக்குத் துணைபுரியும் கல்வி போன்ற பலவும் முக்கியத்துவம் கொண்டுள்ளன.

கல்வியானது நிறுவனங்கள் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டதாயுள்ளது. தகைமைகளும், அவற்றின் அடிப்படையிலான தொழில்களும், வருமானங்களும், வசதிகளும், சமூகஅந்தஸ்துகளும் முக்கியமானவை. இலங்கைத் தமிழர் வரலாறு முழுவதும் இந்த முறைசார் கல்வி (Formal Education) மீதான நாட்டமும், அவற்றின் மேன்மையும், நெருக்கடிகளும் அதீத முக்கியத்துவ முடையனவாயுள்ளன. இலங்கைத் தமிழரது அரசியல் வாழ்வின் நோக்கையும், போக்கையும் முறைசார் கல்வி சார்ந்த முரண்பட்ட நிலைமைகள் நிர்ணயித்து வந்துள்ளன. இப்போதும் நிர்ணயிக்கின்றன.

பாரம்பரிய கைத்திறன்கள், நிலம் மற்றும் வேளாண்மை, கடல் மற்றும் கடற்றொழில், குடும்ப மருத்துவம் போன்ற பலவும் பட்டறிவு (Tacit Knowledge) அல்லது அனுபவ கைமாற்றல் வழி அறிவு என்பன சார்ந்த முறையில் அல்லது முறை சாராத (Informal and Nonformal) கல்வியாகவும் வளர்ந்துள்ளன. கிராமிய வாழ்வியல் மற்றும் பண்பாட்டு இயல்புகளுடன் இத்தகைய கல்வியும் தன் பங்களிப்பை வழங்கி வருகின்றது.

இதேபோல், இடப்யெர்வுகளும், குடியமர்வுகளும், மக்கள் விருப்பத்துடனும், விரக்தியுடனும் எம்மவர் வாழ்வுப் பயணம் முழுவதும் நிகழ்ந்தே வருகின்றன. காலனிய குடியேற்றம், தொழிலாளர் புலம்பெயர்வுகள், வாணிபம், பிழைப்புக்கான குடிப்பெயர்ச்சி, பாதுகாப்புப் புலப்பெயர்ச்சி, யுத்த அபாய தவிர்ப்புக்குரிய பெயர்வுகள் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ கூட்டம் கூட்டமாக நிகழ்ந்து வருகின்றன. இப்போதும்கூட இடம் பெயர்ந்து வாழ்வதற்கான வேட்கையும் வேகமும் குறைந்தபாடில்லை. இது முடிவில்லா தொடர் பயணம்தான்.

“இலங்கைத்தமிழர் எத்தகைய மாற்றங்களையும் மிகவும் இயல்பாகவும், எளிதாகவும் ஏற்றுக்கொள்ளும் பண்புகள் நிறைந்தவர்கள்” என்று சர்வதேச நிறுவனங்கள் பலவற்றின் ஆய்வறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இந்த இயல்பு இடப்பெயர்வுகளினால் படிமலர்ச்சி பெற்றனவாகவும், இடப்பெயர்வுக்கு ஊக்கம் தருவனவாகவும் அமைந்து விடுகின்றன.

இடப்பெயர்வு தமிழரது தொல்லியல் வாழ்வுமுறையிலும் புதைந்தும், பின்னியும் கிடக்கின்றது. இடப்பெயர்வானது குடிசனவியல் அசைவு என்பதற்குமப்பால் அது பண்பாட்டு வாழ்வியலுடனும் பிணைந்து கிடப்பதை வரலாறு முழுவதும் காணக் கூடியதாயிருப்பது ஒரு சிறப்பம்ச மாகும்.

இலங்கைத் தமிழரது உணர்வு பூர்வமான மற்றும் அறிவுபூர்வமான வாழ்க்கைப் பண்புகளிலிருந்து கல்வி என்பதைப் பிரித்துப் பார்க்கவே முடியாது. பாரம்பரிய வதிவிடங்களில் வாழும்போதும், இடம் பெயர்ந்து குடியேறிய நாடுகளில் தம் வாழ்வை நிலைநிறுத்தும்போதும் முறைசார் கல்வி (Formal Education)யும் அதன் வழியான தகைமைகளும் அதிக முன்னுரிமைக்குரியனவாகவே விளங்குகின்றன.

தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து செல்வந்த நாடுகளில் வாழ்ந்தபோதும் அதியுயர் தொழில்வாண்மைக்கல்விக்காக மீண்டும், மீண்டும் பல நாடுகளுக்கும் புலம்பெயரும் ஆர்வத்தோடுதான் இப்போதும் வாழ்கின்றனர். இத்தகைய வேட்கை முடிவுறப் போவதேயில்லை.

## தமிழர் புலப்பெயர்வு: விசைகளும் விளைவுகளும்

“மனிதனுக்குக் கால்களிருப்பது ஓரிடத்தில் நின்றபடி அங்கு வேரூன்றுவதற்கல்ல. நடப்பதற்கும் புலம்பெயர்வதற்கும்தான்” என்கிறார் ஓர் ஆய்வாளர். “மனித நாகரிகம் உலகம் முழுவதும் நகர முடிந்தமைக்குக் காரணம் மனிதர்களது நடக்கும் திறனும், புலம்பெயரத் தயங்காத மனோதைரியமும்தான்” என்கிறார் ஆர். பாலகிருஷ்ணன்.

1924 செப்ரெம்பர் 20இல், இமாச்சல் பிரதேசத்து சிம்லாவிலிருந்து தொல்லியல் ஆய்வாளர் சேர். ஜோன் மாஷல் (Sir John Marshal) “சிந்து வெளிப்பண்பாடு என்பது ஆதி திராவிடரின் பண்பாடு - தமிழரின் பண்பாடு” என்கிறார்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில், இந்தியாவின் வடமேற்கில் நிலவிய சிந்துவெளிப் பண்பாடு, இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன் தென் தமிழகத்துக்குத் திராவிட மக்களோடு இடம்பெயர்ந்தது. 1400 கிலோ மீற்றர் தூரத்தை 1300 ஆண்டுகளாக இடம்பெயர்ந்துள்ளனர். இந்த இடப்பெயர்வு தமிழர் தம் தொன்மையின் மகிமையை உலகுக்கு உரத்துச் சொன்னது.

85,000 ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரிக்காவிலிருந்து ஆசிய, ஐரோப்பியா, அவுஸ்திரேலியா நாடுகளுக்கு புலம்பெயர்ந்த மானிட வரலாற்றுடன், சிந்துவெளியிலிருந்து தமிழகத்துக்குப் பெயர்ந்த திராவிடர் (தமிழர்) இடப்பெயர்வுடன் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும் (ஆர். பாலகிருஷ்ணன், 2023)

தமிழர்களது இடப்பெயர்வுகள் இலங்கையின் உள்ளேயும், உலகின் பல நாடுகளுக்கும் பல்வேறு உதைப்பு - இழுவை (Push - Pull) காரணிகளினால் நிகழ்ந்து வந்துள்ளன.



* முதலாம் உலக யுத்தம் (1914) இரண்டாம் உலக யுத்தம் (1939) என்பன உலக ரீதியாக மானிடர்களது இடப்பெயர்வை உலகமயப்படுத்தியிருந்தன. இக்காலத்தில் இலங்கைத் தமிழர் முதன் முதலாக மலேயாவுக்கு புலம் பெயர்ந்து தொழில்புரியவும், வாழவும் தொடங்கினர். அவர்கள் தலைமுறை அங்கேயே கல்வி கற்கவும் தொடங்கினர். 1875இல்தான் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வைத்திலிங்கம் என்பவர் முதன் முதலாக மலேயாவுக்கு பயணமானார். தொடர்ந்து ஓரளவு வசதிபடைத்த இலங்கைத் தமிழர் மலேயாவுக்கு இடம் பெயர்ந்தனர். 1911இல் ஏழாயிரம் இலங்கைத் தமிழர் மலேயாவில் வாழ்ந்தனர் என்கிறார் பேராசிரியர் கா. குகபாலன் (2017).

* 1823 காலப்பகுதி, இலங்கைத் தமிழரது இடப்பெயர்வு, கல்வி என்பன தொடர்பாக தவிர்க்க முடியாத காலப்பகுதியாக கணிப்பிடப்படுகிறது. இலங்கையின் கோப்பித் தோட்டங்களுக்குரிய தொழிலாளர்களாக தென்னிந்தியாவிலிருந்து முதலாவது தொகுதியினர் அழைத்து வரப்பட்டனர். கூட்டங்கூட்டமாக மன்னார் வழியாக, பதுளைவரை இடம்பெயர்ந்தனர். திட்டமிட்ட இடப்பெயர்வாக இது நிகழ்ந்தது. இரு நூறு ஆண்டுகள் கடந்தும் இலங்கையில் சமமான கல்வி யுரிமை அவர்களுக்கு உறுதி செய்யப்படவேயில்லை என்பதுகூட ஒரு வரலாற்றுத் துரோகம்தான். இதே பெருந்தோட்டத் துறையிலிருந்து கனடாவுக்குப் புலம் பெயர்ந்தோர் ஐந்து வருடங்களில் குடியுரிமை பெற்று அதியுயர் கல்வியும் பெறுகின்றனர். இது எத்தகைய முரண்பாடு?

1823, 1824 காலப்பகுதியில் அமெரிக்காவின் கிழக்குக்கரையோரத்திலிருந்து இலங்கை சென்ற அமெரிக்க மிஷினரியினர் வட்டுக்கோட்டை செமினரியையும், உடுவில் மகளிர் பாடசாலையையும் தெல்லிப்பளையில் விடுதி வசதி கொண்ட யூனியன் கல்லூரியையும் நிறுவி கல்வியில் மிகப்பெரிய முன்னேற்றங்களை உருவாக்கினர். தமிழ்மொழிக்கல்வி, பெண் கல்வி, தாய்மொழியில் மருத்துவக்கல்வி அதியுயர் புலமையுடனான ஆங்கில மொழிக் கல்வி போன்ற பலவகை முன்னேற்றங்களையும் யாழ்ப்பாணத்தமிழர் சமூகத்தில் உருவாக்கியதையும் நினைவுபடுத்த வேண்டும்.

* 1953இல் குடியானவர் குடியேற்றத் திட்டம் இலங்கை அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டபோது தண்ணீர்த் தட்டுப்பாடு மிகுந்த தீவகப் பெருமக்கள் வன்னிப் பிரதேசத்துக்குத் தொகுதி தொகுதியாக இடம்பெயர்ந்தனர். நெடுந்தீவு, அனலைதீவு, காரைதீவு, புங்குடுதீவு போன்ற பகுதிகளிலிருந்து ஏராளமானோர் புலம்பெயர்ந்து வாழ்ந்தனர். இதனால், வன்னியில் ஏராளமான கல்வி நிறுவனங்கள் வளர்ச்சி பெறலாயின.

* 1958இல் தனிச் சிங்களச்சட்டம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினால் அமுலாக்கப்பட்டது. அமைதியான தமிழர் அரசியல் வாழ்வை சீரழிக்கத் தொடங்கிய முதலாவது அரசியல் அதிர்வு இதுவாகும். லண்டனில் படித்துப் பட்டம் பெற்ற SWRD பண்டார நாயக்கா இதனைத் தொடங்கினார். ஏசியன் ட்ராமா (Asian Drama) என்ற அரசியல் நூலை எழுதிய சுவீடிஷ் பொருளியலாளன் குன்னர் மிர்தால் 1970களில் அவர் பற்றிக் குறிப்பிட்டது மனங்கொள்ளத்தக்கது.

“ஆங்கில மொழியில் பட்டம் பெற்றவர் சிங்கள மொழியைத் தேசிய மொழியாக்கினார். ஆங்கிலேய உடையில் கற்றவர் வேட்டி, சால்வைக்கு மாறினார். கிறிஸ்தவ சமயத்திலிருந்து பௌத்த சமயத்துக்கு மாறினார். ஆங்கில மொழிப்பிரயோகத்தைக் கைவிட்டு தனிச்சிங்களத்தை அரச கரும மொழியாக்கினார்.”

இத்தகைய மாறுதல் தமிழரை எதிர்ப்பு அரசியலுக்குள் தள்ளியது. சத்தியாக்கிரகம், இனக்கலவரம் என்பன மேற்கிளம்பின. தென்னிலங்கையிலிருந்தும் மேல் மாகாணத்திலிருந்தும் தமிழர் இந்தியாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அதிகளவில் புலம்பெயர்ந்தனர். இளைஞர்களும் அதிகம் புலம்பெயர்ந்தனர். சர்வதேச இடப்பெயர்வு தொடங்கியது. இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் நம்மவர் கல்வி கற்கத் தொடங்கினர்.

இதற்கு முன்னர் செல்வந்தர்களின் பிள்ளைகளில் சிறுதொகையினரே இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குக் கல்வி கற்பதற்காகவே சென்றிருந்தனர் என்பது வலியுறுத்தப்பட வேண்டும். இது புலம்பெயர்வுகளுடன் தொடர்பு எதுவுமற்ற பயணங்களேயாகும். (தொடரும்)

## நாமும் நமது இல்லமும் 653

# கனடியர்களின் பொருளாதார நிலைமை மாறுகின்றது!






கனடிய மக்களின் சிறப்பான வாழ்க்கை மாறுகின்றதா? அத்தியாவசிய தேவைகளைச் சமாளிப்பதே சிக்கலாக இருப்பதாகக் கனடியர்கள் உணர்வதாகத் தெரிகின்றது. இதற்கு முக்கிய காரணமாக, அன்றாட தேவைகளிற்கே வருமானத்தின் பெரும்பங்கு செலவழிக்கப்படுகின்றது.

உதாரணமாக 2023இன் மார்ச் மாதத்துடன் 2024ஆம் ஆண்டின் வட்டிச்செலவை ஒப்பிடும்போது 2024இல் வட்டிச்செலவு 25.4%இனால் அதிகரித்துள்ளது. அத்துடன் வாடகைச் செலவு 8.5% இனால் அதிகரித்துள்ளது. இதனால் கனடியர்களின் மற்றைய செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்கால பொருளாதாரம், குறிப்பாக ரொறொன்ரோ மற்றும் அதனைச் சுற்றியுள்ள முக்கிய நகரங்களில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். நகரத்தை விட்டு மக்கள், செலவு குறைந்த பகுதிகளுக்கு இடமாறலாம். வசதி படைத்தோர் மீதான அதிக வரிச்சுமை அவர்களை வேறு நாடுகளுக்கு புலம்பெயர்வதனை (செல்வதனை) ஊக்குவிக்கலாம்.

புதிதாக ஆதனம் வாங்க இருப்போர், வட்டிவீத அதிகரிப்பால், வாங்குவதற்கு காலம் தாழ்த்துவதனைக் காணலாம். பொதுவாக நீண்ட காலத்தில் ஆதன விலையில் அதிகரிப்பு ஏற்படும். ஆனால், இதற்கு மேலும் சில காலம் எடுக்கும் என்பதனை இன்றைய தரவுகள் காட்டுகின்றன.

டிசெம்பர் 2023இலிருந்து ஆதனத்தின் விலை மேலும் இறக்கம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டதாகக் கொள்ளலாம். ஆதன விலையில் அதிகரிப்பை எதிர்பார்க்கலாம். குறிப்பாக ரொறொன்ரோ பெரும்பாகம் மற்றும் வன்கூவரில் இதனைக் காணலாம். இந்நிலை வேகம் எடுப்பதற்கு குறிப்பிட்டளவு வட்டிவீத இறக்கம் தேவைப்படுகின்றது.



கனடியர்கள் எதிர்பார்ப்பதுபோல ஜுன் 2024இலும் அதற்கப்பாலும் அதிகளவு வட்டிவீத இறக்கம் ஏற்பட்டால் குறிப்பிடக் கூடிய அளவு ஆதன விலை அதிகரிப்பை எதிர்பார்க்கலாம். அதுவும் சிறிது சிறிதாகவே ஏற்படலாம்.

அதிகளவு ஆதன விலை அதிகரிப்பும் ஆரோக்கியமானதல்ல. அதிகமாக விலை அதிகரிப்பு ஏற்பட்டாலும் மத்திய வங்கி வட்டி வீதத்தை அதிகரிக்கவும் சிந்திக்கலாம். அல்லது வட்டி இறக்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடும். எனினும், இந்த வருடத்தில் குறைந்தது 1% வட்டி இறக்கம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பமும் அதிகமாக இருப்பதாகப் பொருளாதார விற்பன்னர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

இன்றைய காலத்தில் மூன்று அரசுகளும், அதிகமான ஆதனங்களை சந்தைக்குக் கொண்டுவர பலவேறான முயற்சிகளை எடுக்கின்றன. நகர சபைகள், உள்ளூராட்சி சபைகள் புதிய வீடு / மனைகள் கட்டுவதற்கு ஒப்புதல் (approval) கொடுக்கும் காலத்தைக் குறைப்பதற்கு மூன்று அரசுகளும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதற்கு உள்ளூராட்சி சபைகளும் உதவ வேண்டும்.

நிர்மாணத்துறைக்குப் போதியளவு திறமையான உழைப்பாளிகள் தேவைப்படுகின்றது. கனடியர்களை இந்தத் தொழிலில் இணைவதற்கு ஊக்கம் கொடுத்தல் வேண்டும்.

புதியமுறையில் ஆதனம் உருவாக்குவதற்கு அரசுகள் புதிய திட்டங்களைச் செயல்படுத்த ஊக்குவிக்க வேண்டும். உதாரணமாக, முன்னரே தயாரிக்கப்பட்ட வீடுகள் (Prefabricated Houses - இந்த முறை சீனா போன்ற நாடுகளில், மிகவும் பிரபலமாகக் காணப்படுகின்றது.) இலகுவாகவும், விரைவாக ஆதனங்களைக் கட்டிமுடிக்க உதவுகின்றன.

இந்த முறை வாடகை நோக்கத்திற்காக அதிகளவிலான ஆதனங்களை உருவாக்குவதால், எதிர்காலத்தில் ஏற்படப் போகும் ஆதனக்குறைபாடுகளை ஓரளவு தவிர்க்கலாம் அல்லது நிவர்த்தி செய்யலாம். செய்யலாம்.

ஏற்கனவே மத்திய அரசு, புதிதாகக் கனடாவிற்குள் அனுமதிப்பவர்களின் எண்ணிக்கையில் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்துள்ளது. எனினும், 2024இல் 485,000 மற்றும் 2025இல் 500,000 புதியவர்களை அனுமதிக்க உள்ளது.

புதிதாக கனடா உள்கொள்ள இருப்பவர்களில், பொருளாதாரத்தில் தன்னிறைவானவர்களை உள்வாங்குவதால் நாட்டின் பொருளாதாரத்தில் சிறப்பு ஏற்படலாம் என பல அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவர்கள் புதிய தொழில்களை உருவாக்கலாம்.

கடந்த சில வருடங்களில் கனடாவுக்கு வந்தவர்களினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி உடனடியாக ஏற்படப் போவதில்லை. எதிர்காலத்தில் கனடிய பொருளாதாரத்திற்கு இவர்களின் உதவி கிடைக்கும்.

ஆனால், இன்றைய பொருளாதாரமும் முக்கியமாகும். அதற்கேற்ப அரசு முடிவுகள் எடுக்கின்றனவா?

பொருளாதாரம், ஆரோக்கியமாக இல்லாமல் இருப்பின், சமூகக் கட்டமைப்பில் (Social structure) தளர்வு அல்லது முறைகேடுகள் ஏற்படலாம். இது ஓர் ஆரோக்கியமான சமூகத்திற்கு நல்லதல்ல.

எனினும், இன்றைய காலத்தில், குறிப்பாக 2022-2023இல் புதிதாக மனைகள், வீடுகள் சந்தைப்படுத்துவது குறைந்துள்ளது அல்லது முற்றாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் கொள்ளலாம்.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டது அல்லது வேறு காரணங்களிற்காகக் கட்டப்படுபவை தொடர்கின்றது. இதற்கு அப்புறம், புதிய நிர்மாணங்கள் தொடங்கப்படாமல் இருப்பின் இரண்டு, மூன்று வருடங்களிற்குப் பின்பாக மீண்டும், ஆதனப்பற்றாக்குறை ஏற்படுவதனைத் தவிர்க்க முடியாது. இதனைத் தவிர்ப்பதற்காகவே அரசுகள் புதிய முறைகளைக் கையாள வேண்டும்.

உடனடியாக ஆதன விலையில் அதிகரிப்பு ஏற்படாவிட்டாலும் விலை இறக்கம் என்பது நிறுத்தப்பட்டுள்ளது என்பது காணக்கூடியதாக உள்ளது. தலைக்கு மேலே கூரை என்பது என்றும் தவிர்க்க முடியாததே. குடியிருக்க ஆதனம் தேவை. உணவு, உடை போலவே ஆதனமும் இன்றியமையாதது. ஆதனம் வியாபாரத் திற்கு இல்லையாயினும் குடியிருப்பதற்கு அவசியம் தேவைதானே.

எனவே ஆதனம் எக்காலத்திலும், எப்பொழுதும் தேவைப்படும். நீண்ட காலத்தேவையைக் கருத்தில்கொண்டு தகுந்த வாங்குபவரின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய ஆதனம் ஒன்றை உரிமை கொள்வது என்றும் சிறந்தது என்பது எனது நம்பிக்கை.








# பாஜகவினரைப் பயங்காட்டும் வைரல் யூ டியூபர் - யார் இந்த துருவ் ராதே?


இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் களத்திற்கே வராமலும் இந்தியா முழுவதும் அதிகம் பேசப்படுவோர் இருவர். ஒருவர் நடிகர் பிரகாஷ் ராஜ் இன்னொருவர் இந்தி யூ டியூபர் துருவ் ராதே!

பிரகாஷ் ராஜை போலவே பாஜகவை மிகக் கடுமையாக விமர்சிக்கிறார் துருவ் ராதே. 'வாட்ஸ்அப் மாஃபியா - மில்லியன் கணக்கான இந்தியர் எப்படி மூளைச் சலவை செய்யப்பட்டனர்?' என்ற தலைப்பில் பாஜகவினர் பற்றி துருவ் ராதே கடைசியாக ஏப்ரல் 04, 2024அன்று வெளியிட்ட காணொளி, 24 மணி நேரத்துக்குள் 1 கோடியே 21 லட்சம் பார்வைகளை எட்டியுள்ளது!

## யார் இந்த துருவ் ராதே?

இன்று இந்தியா முழுவதும் அறிமுகமான மிகச் சில யூடியூபர், விளாக்கர், சமூக ஊடக ஆர்வலர்களில் துருவ் ராதேவும் ஒருவர். குறிப்பாக சமூக அரசியல், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்த யூடியூப் காணொளிகளுக்காக மிகப் பிரபலமாக அறியப்படுகிறார், துருவ் ராதே.

இந்தக் கட்டுரையை எழுதும் ஏப்ரல் 25, 2024 நிலவரப்படி, துருவ் ராதே சேனலை ஒரு கோடியே 84 லட்சம் பேர் பின்தொடர்கின்றனர். இதுவரை 259 கோடியே 51 லட்சம் பேர் அவரது காணொளிகளைப் பார்த்திருக்கின்றனர்.



துருவ் ராதேவை இன்ஸ்டாக்ராமில் 69 லட்சம் பேரும் ஃபேஸ்புக்கில் 28 லட்சம் பேரும் எக்ஸ் தளத்தில் 21 லட்சம் பேரும் வாட்ஸ் அப் சேனலில் 18 லட்சம் பேரும் பின் தொடர்கின்றனர்.

யூடியூபர், விளாக்கர், சமூக ஊடக ஆர்வலர் என்பதுடன் இணையதள டெவலப்பர், டிசைனர், காப்பிரைட்டர், ப்ரொஜெக்ட் டீம் லீடர், டேட்டா அனலிஸ்ட், இ-காமர்ஸ் மேனேஜ்மென்ட் மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் ஆலோசகர் என பன்முகம் கொண்ட துருவ் ராதேவுக்கு 29 வயதுதான் ஆகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## துருவ் ராதே குடும்பமும் கல்வியும்

இந்தியாவின் வடக்கு மாநிலங்களில் ஒன்றான ஹரியானாவில் உள்ள ரோஹ்தக்கில் ஒக்ரோபர் 08, 1994 அன்று பிறந்தார் துருவ் ராதே. நடுத்தரக் குடும்பம்தான். தொழிலதிபரான தந்தையும் ஆசிரியையான தாயும் பணிகள் காரணமாக டில்லியில் வாழ்ந்தனர். எனவே, ராதேவும் டில்லியில்தான் வளர்ந்தார். அவருக்கு ஒரு தம்பி.
ராதே, பள்ளிக் கல்வியை டெல்லி பப்ளிக் பள்ளியிலும் ஆர்.கே. உயர்நிலைப் பள்ளியிலும் முடித்த பிறகு, 2013 - 2015 காலகட்டத்தில் டெல்லி பல்கலைக் கழகத்தில் பொருளாதாரம் மற்றும் அரசியல் அறிவியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார். தொடர்ந்து 2015 - 2017இல் ஜெர்மனியில் உள்ள கார்ல்ஸ்ரூ இன்ஸ்டிடியூட் ஒப் ரெக்னோலஜியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங்கில் முதுகலை அறிவியல் பட்டம் பெற்றார்.

ராதேயின் இந்த வலுவான கல்விப் பின்னணியே அவரை ஒரு வெற்றிகரமான யூடியூபராகவும் கல்வியாளராகவும் ஆக்கியிருக்கிறது. ராதேயின் கல்விப் பின்னணி அவருக்கு பொருளாதாரம், அரசியல், பொறியியல், அறிவியல் உள்ளிட்ட பல்வேறு பாடங்களில் அடித்தளத்தை அளித்துள்ளது. இந்த அடித்தளம்தான் அவருக்கு பல்வேறு தலைப்புகளில் தகவல் மற்றும் கல்வி சார்ந்த காணொளிகளை உருவாக்க உதவியுள்ளது.

மேலும், கற்பது என்பதை கல்லூரியோடு முடிந்த ஒன்றாக ராதே கருதுவதில்லை. வாழ்நாள் முழுவதும் கற்பவர்களிலும் ராதேவும் ஒருவர். தனது அறிவையும் திறமையையும் மேம்படுத்த, "இன்றைய நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் புதிய வழிகளையும் தேடு"வதாக சொல்கிறார், ராதே.

இதனுடன், அவரின் அடர் பழுப்பு நிற முடி, பழுப்பு நிறக் கண்கள், உயரமான, ஒல்லியான உடல் (183 செ.மீ. (6 அடி) உயரம், 165 பவுண்ட் (75 கிலோ) எடை), நட்பான - யாரும் அணுகத் தயங்காத முக அமைப்பு, அடிக்கடி புன்னகைப்பது, ஜீன்ஸ் மற்றும் டி-ஷர்ட்கள் போன்ற சாதாரண ஆடைகளையே அதிகம் அணிவது (எப்போதாவதுதான் சூட் அல்லது சட்டையுடன் தோன்றுகிறார்) இவை எல்லாம் சேர்ந்துதான் ராதே வெற்றிகரமான யூடியூபராக உதவியிருக்கிறது என்று சொல்லலாம்.

ராதேயின் குடும்பமும் ஆரம்பத்திலிருந்தே அவரது யூடியூப் தொழிலுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது. அவரது பெற்றோர் அவரது கல்வியைத் தொடர ஊக்கப்படுத்தியது போல் கனவுகளைப் பின்பற்றவும் ஊக்கப்படுத்தி இருக்கின்றனர். ராதேயின் சகோதரரும் ஒரு யூடியூபர். அவரும் ராதேயின் பல காணொளிகளில் ஒத்துழைத்துள்ளார்.

ராதே, தனது குடும்பத்தைப் பற்றி அதிக தகவல்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்து கொள்வதில்லை. இருப்பினும், தனது குடும்பம் தனக்கு மிகவும் முக்கியமானது என்றும், அவர்கள் தனது வாழ்க்கையில் பெரும் பங்கு வகிக்கின்றனர் என்றும் கூறியுள்ளார். இது தொடர்பாக ஒரு காணொளியில் பேசும் போது, "எனது குடும்பமே எனக்கு மிகப் பெரிய உத்வேகம். கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, இரக்கத்தின் முக்கியத்துவத்தை எனது பெற்றோர்தான் எனக்கு கற்பித்தனர். அவர்கள் வழங்கிய ஆதரவிற்காக எனது வாழ்க்கை முழுவதும் அவர்களுக்கு நன்றியுடன் இருப்பேன்" என்கிறார், ராதே.

## காதல் திருமணம்



ஆஸ்திரியாவின் வியன்னாவில் உள்ள பெல்வெடெரே அரண்மனையில் நவம்பர் 2021இல், தனது நீண்டகாலக் காதலியான ஜூலி எல்பிரை மணந்தார், துருவ் ராதே. ஜூலி ஒரு ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த பெண். ஜூலியை ஜெர்மனியில் கார்ல்ஸ்ரூ இன்ஸ்டிடியூட் ஒப் ரெக்னோலஜியில் படிக்கும் போதுதான் முதன்முதலில் சந்தித்தார் ராதே. 2018இல் டேட்டிங் செய்து 2020இல் நிச்சயதார்த்தம் செய்து கொண்டனர்.

தனது குடும்ப வாழ்க்கை பற்றி ராதே ஒரு நேர்காணலில், "திருமணம் ஒரு பெரிய பொறுப்பு. ஆனால், ஜூலியுடன் எனது வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தைத் தொடங்க உற்சாகமாக இருந்தேன். இருவரும் குடும்பத்தை சிக்கலின்றி, சிறப்பாக நடத்த உறுதி பூண்டுள்ளோம். ஜூலி எனக்கு மிகப்பெரிய ஆதரவாளர். அவளை எனது வாழ்க்கையில் பெற்ற வகையில் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி"

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)




# நானிலம் போற்றும் நட்பு - 43




“பலநல்ல கற்றக் கடைத்து மனநல்லர்
ஆகுதல் மாணார்க் கரிது.” (அதிகாரம் தீ நட்பு, குறள் 823) என்ற குறளிற்கு பல நல்ல நூல்களைக் கற்றுத் தேர்ந்த போதிலும், அவற்றின் பயனாக நல்ல மனம் உடையவராகப் பழகுதல், (உள்ளன்பினால்) மாட்சியடையாதவர்க்கு இல்லை.” என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

“பல நல்ல நூல்களைப் படித்தபோதும், சிறந்த பண்பு இல்லாதவர் நல்ல உள்ளம் உடையவராவது கடினம்” என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

“பல நல்ல நூல்களைப் படித்திருந்தாலும், பகைவர்கள் நட்பினராக மாட்டார்கள்” என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

“அரிய நூல்கள் பலவற்றைக் கற்றிருந்த போதிலும், பகையுணர்வு படைத்தோர் மனம் திருந்தி நடப்பதென்பது அரிதான காரியமாகும்.” என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.

பல நல்ல நூல்களைப் படிப்பதால் நல்ல உள்ளம் உடையவராக வர முடியாது. சிறந்த பண்பு இருந்தால் நல்ல உள்ளம் உடையவராக முடியும் என்ற அறிவுரையை இந்தக் குறள் கூறுகிறது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் ஐம்பத்தி ஆறாவது பாடலைக் கவனிப்போம்.
இப்பாடல் சிறைக் குடியாந்தையார் என்பவர் பாடிய பாட்டு. தலைவியை உடன் அழைத்துச் செல்ல மறுத்த தலைவன் தான் சென்ற வழியில் உள்ள கொடுமையைக் கண்டு கூறியது தலைவன் கூற்று. இது பாலைத்திணை சார்ந்தது.

“வேட்டச் செந்நாய் கிளைத்து ஊண்மிச்சில்
குளவி மொய்த்த அழுகல் சின்னீர்,
வளையுடைக் கையள் எம்மாடு உணீஇயர்
வருகதில் அம்ம தானே,
அளியளோ! அளியல் என்நெஞ்சு அமர்ந்தோளே.”

தலைவன் புறப்படப் போகிறான் என்ற செய்தியை அறிந்தவுடனேயே தலைவியின் உள்ளம் தளர்ந்துவிட்டது. வழக்கம்போல் சிரித்து விளையாடவில்லை. தலைவன் போனபின் என்ன செய்வோம் என்று எண்ணி எண்ணி ஏங்கிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.

ஆதலால் தோழி தலைவனைப் பார்த்துத் தலைவியையும் உடன் அழைத்துக் கொண்டு போகும்படி வேண்டிக்கொண்டாள். ‘உள்ளம், உடல், உயிர் அனைத்தையும் உன்னிடமே பறிகொடுத்த தலைவி, நீ இல்லா விட்டால் எப்படி உயிர் வாழ்வாள்? உயிர் வாழ்ந்தாலும் அவள் ஒரு நடைப் பிணமாகத்தான் காட்சியளிப்பாள். நீ செல்லும் இடத்துக்கு அவளையும் அழைத்துப் போனால்தான் அல்லற்படாமல் அக மகிழ்ந்திருப்பாள்’ என்று வேண்டிக் கொண்டாள்,

‘தோழியே! தலைவியின் தன்மையை நான் அறிவேன். நான் இல்லாவிட்டால் அவள் நலன் இழந்து வருந்துவாள் என்பது எனக்குத் தெரியும். ஆயினும் நான் அவளை அழைத்துச் செல்வதால் ஆபத்துக்கள் தாம் அதிகமாகும். நான் செல்லும் வழி கரடு முரடான பாலைநிலம், நிழலும் நீருமற்ற நீண்டவழி” என்றான் தலைவன்.

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.
“வேட்டையாட வந்த செந்நாய்கள். கிளைத்து தோண்டி உண்ட மீதமாகிய, காட்டு மல்லிகை பூக்கள் விழுந்து மூடிய, அழுகல் நாற்றம் வீசும் இச்சிறிய நீரை, வளையல் அணிந்த கையையுடைய, தலைவியை, எம்மோடு கூட விருந்து உண்ணுவதற்கு, வருக என்று அழைத்தால், என் உள்ளத்தில் உறைந்திருக்கும் அவள், மிகவும் இரங்கத் தக்கவளாயிருப்பாள்.”

இப்பொழுது குறுந்தொகையில் வரும் ஐம்பத்தி ஏழாவது பாடலைக் கவனிப்போம்.
இதுவும் சிறைக் குடியாந்தையார் என்னும் புலவர் பாடிய பாடல். வெளியில் போக முடியாமல் காவலுக்கு உள்ளாக்கப்பட்ட தலைவி, ‘தலைவனும், நானும் தனித்திருப்பதைவிட, ஒன்றாக இருந்து உயிர் விடுவதே சிறந்தது’ என்று தன் தோழியிடம் உரைத்தது தலைவி கூற்று. இது மருதத்திணை சார்ந்தது.

“பூஇடைப் படினும் யாண்டு கழிந்து அன்ன
நீர்உறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவு அரிதுஆகிய தண்டாக் காமமொடு
உடன்உயிர் போகுக! தில்ல, கடன் அறிந்து
இருவேம் ஆகிய உலகத்து
ஒருவேம் ஆகிய புன்மைநாம் உயற்கே”

இரவிலும் பகலிலும் தலைவி வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கின்றாள். அவள் காதலித்துக் கைப்பிடித்த காதலனைக் கண்டு மகிழ முடியவில்லை. அதனால் அவள் உள்ளம் நொந்தாள் தாங்க முடியாத துக்கத்தால் ஆவி துடித்தாள். தன் துக்கத்தைத் தன் தோழியிடம் சொல்லி வருந்தினாள். ‘தோழியே!’ யானும் என் தலைவனும் பல பிறப்புக்களிலும் கணவனும் மனைவியுமாகவே வாழ்ந்தவர்கள், இல்லறம் நடத்தும் முறைகளை அறிந்து இல்லறம் நடத்தி வந்தவர்கள். எங்கள் உடல் வெவ்வேறாக இருந்தாலும், உள்ளமும் உயிரும் ஒன்றுபட்டவை. எங்கள் நட்பு இன்று நேற்று ஏற்பட்ட புதிய நட்பன்று தொன்று தொட்டுத் தொடர்ந்து வந்த நட்பாகும். ஆதலால் எங்களை யாரும் பிரிக்க முடியாது.

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

“தோழியே செய்ய வேண்டிய கடமைகளை அறிந்து ஒழுகி, கணவன் மனைவி யென்னும் இருவராகவே, பல பிறவிகளிலும் பிறந்து வாழ்ந்த இவ்வுலகிலே, இப்பொழுது தனித்தனி பிரிந்து வாழ்வதாகிய இத்துன்பத்திலிருந்து, விடுபடுவதற்கு, மலர் தங்களிடையே நின்று சிறிது நேரம் தடுத்தாலும், அதனால் பல ஆண்டுகள் கழிந்தது போன்ற துன்பத்தையடைகின்ற, நீரிலே வாழ்கின்ற மகன்றிற் பறவையின், ஒன்று பட்ட வாழ்க்கையைப் போல, பிரிவதற்கு முடியாத, நீங்காத அன்புடன் நாங்கள் ஒன்று சேர்ந்திருக்கும் போதே, ஒன்றாகவே எங்கள் உயிர் போக வேண்டும்.”

இப்பொழுது குறுந்தொகையில் வரும் ஐம்பத்தி எட்டாவது பாடலைக் கவனிப்போம்.
இப்பாடல் வெள்ளி வீதியார் பாடிய பாட்டு. தனக்குப் புத்தி புகட்டிய பாங்கனிடம் எனது காதல் நோய் பொறுக்க முடியாதது, இதனை நீங்கச் செய்தால் நன்று என்று தலைவன் கூறினான். இது குறிஞ்சித்திணை சார்ந்தது.




“இடிக்கும் கேளிர்! நும்குறையாக
நிறுக்கல் ஆற்றினோ நன்று, மன்தில்லை,
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிதே.”

பாங்கன் தன் தோழன் வரும் வழியை எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தான். காலம் கழிவது கண்டு கவலையடைந்தான். அவன் வழிதவறி எங்குச் சென்று இன்னல் அடைகின்றானோ என்று ஏங்கினான். தோழன் கதிரவன் தன் செங்கதிர்களை ஒடுக்கிக் கொண்டு மேலைத் திசையிலே மறைந்து கொண்டு இருக்கின்றான். இவ்வளவு நேரம் ஆகி விட்டதே, இன்னும் காணவில்லையே, என்ற ஏக்கத்துடன் அவன் சென்ற வழியை உற்று நோக்கினான். இச்சமயத்திலே தலைவன் விரைந்து வந்து கொண்டிருந்தான். அவன் வரும்போதே மிகவும் மகிழ்ச்சியுடனும் உற்சாகமுடனும் காணப்பட்டான். அவனிடத்திலே என்றுமில்லாத ஒரு புதிய மாறுதல் காணப்பட்டது. அவன் உள்ளத்திலே உவகை துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. அவன் பார்வையிலும் முகத்திலும் பலவகையான மாறுபாடுகள் காணப்பட்டன.

தலைவனிடம் இத்தகைய மாறுபாட்டைக் கண்ட பாங்கன் ஐயமுற்றான். தலைவன் போன விடத்திலே ஏதோ அதிசயம் நடந்திருக்க வேண்டும் அதனால்தான் இவன் இப்படிக் குதூகலமாகக் காணப்படுகின்றான் என்று எண்ணினான்.

‘நண்பனே’ நீ துரத்திச் சென்ற மானைத் தொலைத்து விட்டாயா? சென்ற காரியத்திலே சிறந்த வெற்றி கிட்டியிருக்கும் என்று நம்புகின்றேன். வெற்றிக் களிப்பை உன் முகத்தில் காண்கின்றேன். என்ன! நான் நினைப்பது சரிதானா? என்று கேட்டான் தோழன்.
இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

“இடித்துரை கூறும் உற்ற நண்பரே! உமது காரியமாக, நிறுக்கல் என் காம நோயைத் தடுத்து நிறுத்த முடியுமானால். அது சிறந்த நன்மையாகும். சூரியன் வெய்யிலில் காய்கின்ற, வெப்பமான கற்பாறையிலே கையில்லாத ஊமை ஒருவன். கண்ணின் காக்கும் தன் கண்ணால் மட்டும் பாதுகாக்க முயல்கின்ற, வெண்ணெய் உருகுவதைப் போல இந்நோய் என்னால் பொறுத்துக் கொள்வதற்கு முடியாதது.”
இவ்வாறாக இந்தப் பாடல்களில் நட்பின் பெருமை புலப்படுகிறது.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

---

## கைநழுவ...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

மாறாது போனால், தமிழ் மக்களின் வாக்குகள் சிதறிப் போகும், ஜனாதிபதி தேர்தலில் தமிழர்களின் வாக்குகள், கண்டவர்களால் எல்லாம் கையாளப்படும் நிலைதான் உருவாகும்.

அதனைத் தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனுமதிக்கப் போகின்றனவா?

# வீடுகள் குடியிருக்காத குடிமனையல்ல என்பதனை பிரகடனப்படுத்தி விட்டீர்களா? பிரகடனப்படுத்தத் தவறினால் என்ன நடக்கும்?

வீடுகள் குடியிருக்காத குடிமனையல்ல என்பதனை பிரகடனப்படுத்தி விட்டீர்களா? பிரகடனப்படுத்தத் தவறினால் என்ன நடக்கும்?

தமிழர் அதிகமாக வாழும் நகரங்கள் உட்பட, கனடாவின் பல நகரங்களில் உள்ள வீடுகளில்,

- ஒன்றில் குடியிருக்க வேண்டும்.
- இல்லையேல் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

வருடத்தில் ஆறு மாதங்களுக்கு மேலாக குடியிருக்காமலிருக்கும் குடியிருப்பு மனைகளுக்கு அதன் உரிமையாளர்கள், அந்த வீட்டின் விலை மதிப்பீடு செய்யப் பட்ட பெறுமதியில் 1% 'வெற்றிட வரி' (Home vacant tax) செலுத்த வேண்டும் என்ற சட்டமூலம் ஜனவரி 01, 2022இல் இருந்து அமல்படுத்தப்பட்டு வருகின்றது.

(இங்கு விலை மதிப்பீடு என்பது ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மாகாண அரசின்கீழ் செயல்படும் 'நகரசபை ஆதன மதிப்பீட்டுக் கூட்டுத் தாபனம்' (Municipal property assessment corporation) ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு விலை மதிப்பீடு செய்து அதன் பத்திரத்தினை வீட்டின் உரிமையாளருக்கு அனுப்பிவைப்பது வழமையாகும்.)

உதாரணமாக ஒரு மில்லியன் டொலருக்கு மதிப்பீடு செய்யப்பட்ட வீட்டினை வருடத்தில் ஆறு மாதத்திற்கு மேல் வெற்றிடமாக வைத்திருந்தால் $10,000 டொலர் வரி அரசுக்கு செலுத்தியாக வேண்டும்.

ஏமாற்று வேலைகள் செய்வோர், வரி செலுத்தத் தவறுவோர், செலுத்தவேண்டிய வரிக்கு வட்டியோடு $5,000 டொலர்வரை தண்டனை பணமும் செலுத்தவேண்டி வரலாம்.

ஒவ்வொரு வீட்டின் உரிமையாளரும் தங்கள் வீட்டுக்கு வரி செலுத்துமாறு அனுப்பப்படும் பத்திரத்தில் உள்ள அடையாள இலக்கத்தினை (Property tax roll number) அடையாளமாக வைத்து வருடத்தில் பெப்ரவரி மாத இறுதிக்குள் இணையதள வழி மூலமோ அல்லது நேரடி விண்ணப்பம் மூலமோ தங்கள் வீட்டின் நிலைமை பற்றிப் பிரகடனம் செய்துகொள்ள வேண்டும்.

காலதாமதம் செய்து பிரகடனம் செய்தால் $21.24 டொலர் தண்டனை.

பிரகடனப்படுத்தப்படாது விட்டால் $250 டொலர் பண தண்டனை அறவிடப்படும்.

சில நேரங்களில் பிரகடனப்படுத்தத் தவறுவது, வெற்றிடமாக உள்ள மனை எனக் கருதப்பட்டு அதற்குரிய வரியினை மேலதிகமாகச் சேர்த்துச் செலுத்துமாறும் தங்களின் Property tax billஇல் குறிப்பிடப்பட்டு வரலாம். தப்பான தகவல்களினை வழங்குவது, எச்சரிக்கைகள் வந்தும் பிரகடனப்படுத்தத் தவறும் குற்றங்களுக்கு $10,000 டொலர் வரையும் தண்டனை செலுத்தவேண்டி வரலாம். ஆனால் இங்கு சில விதிவிலக்குகளும் உண்டு.

- வீட்டு உரிமையாளர் மரணமடைந்திருந்தால் மூன்று வருடங்கள் விதி விலக்கு.
- உரிமையாளர் முதுமை, நோய்கள் காரணமாக வீட்டில் வாழ முடியாது இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தால் இரு வருடங்கள் விதி விலக்கு.
- புனரமைப்பின் காரணமாகக் குடியிருக்காமல் போனால் அங்கு விதி விலக்கு.
- விற்பனை நடந்து உரிமைகள் மாற்றப்பட்டால் அல்லது நீதிமன்ற உத்தரவுகள் காரணமாகக் குடியிருக்காமல் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அங்கு விதி விலக்கு.

இங்கு தங்களுக்கு நியாயம் மீறப்பட்டுள்ளது எனத் தாங்கள் கருதினால் நகரசபைக்கு முறைப்பாடும் செய்யலாம். தங்களுக்குக் கிடைத்த தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யலாம்.

பொதுவாக கனடா வாழ் தமிழ் சமூகத்தின் மத்தியில் வீடு ஒன்றினை வெற்றிடமாக எவரும் குடியிருக்காமல் வைத்திருப்பது அரிதாகவே இருக்கும். அவ்வாறு குடியிருக்காமல் வைத்திருக்கவில்லை என்பதனை மறந்துபோய் அல்லது அவை பற்றிய கரிசனைகள் இல்லாது பிரகடனப் படுத்தாமல் இருந்து விட்டால் அதுவே திசை மாறி தண்டனைக்குரிய நிலைக்கு இழுத்துச் சென்றுவிடும்.

எனவே சகலரும் தவறாது வருடம் வருடம் நகரசபைக்குப் பிரகடனப்படுத்துங்கள். சுமார் ஐந்து நிமிடங்களில் இணையதள மூலம் பிரகடனப்படுத்தி முடித்துவிடலாம்.

## பாஜகவினரை...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

என்று கூறியுள்ளார்.

ராதேவும் ஜூலியும் தற்போது ஜெர்மனியின் பெர்லினில் வாழ்கின்றனர்.

### யூடியூப்பர் அவதாரம்

ஜனவரி 08, 2013இல் 'துருவ் ராதே' என்று தனது பெயரிலேயே யூடியூப் சேனலைத் தொடங்கினார் துருவ். முதலில் தனது பயண காணொளி ஒன்றை பதிவேற்றினார். அடுத்தும் ஒரு பயண காணொளி. முதல் மூன்று வருடங்களில் இந்த இரண்டு காணொளிகளை மட்டுமே வெளியிட்டார்.

பின்னர் 2016 செப்ரெம்பரில் 'BJP IT Cell Exposed: How lies and propaganda are spread' என்ற காணொளியில் இருந்து அரசியல் மற்றும் சமூக தலைப்புகளுக்கு மாறத் தொடங்கினார். குறிப்பாக உண்மை சரிபார்ப்பு (Fact Check), விளக்கமளித்தல் (Explanation) காணொளிகளைத் தொடர்ந்து வெளியிட்டார். 2022 முஹம்மது கருத்து சர்ச்சை, 2022 மோர்பி பாலம் சரிவு, 2019 புல்வாமா தாக்குதல், 2023 இந்திய மல்யுத்த வீரர்களின் போராட்டம், 2023 மணிப்பூர் வன்முறை உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் ராதே தனது காணொளிகளில் உரையாற்றியுள்ளார்.

இந்தக் காணொளிகளை வெளியிடுவதன் நோக்கம் குறித்த கேள்விக்கு ஒரு நேர்காணலில், "இந்தியாவில் உள்ளவர்களுக்கு இணையத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து பயிற்சியளிக்கப்படவில்லை. இதனால், அவர்கள் யூடியூப், வாட்ஸ்அப்பில் எதைப் பார்த்தாலும் கண்மூடித்தனமாக நம்புகின்றனர்" என்று கூறுகிறார், ராதே.

Dhruv Rathee சேனலில் இதுவரை 612 காணொளிகள் பதிவேற்றப்பட்டுள்ளன. இந்தக் காணொளிகளை இதுவரை 259 கோடியே 94 லட்சத்து 51 ஆயிரம் பேர் பார்த்துள்ளனர். தனிக் காணொளிகளைப் பொறுத்தவரை அதிகபட்சமாக 'Arvind Kejriwal Jailed! | DICTATORSHIP Confirmed?' என்ற துருவ் காணொளியை 3 கோடியே 2 லட்சம் பேர் பார்த்துள்ளனர்.



அரசியல் குறித்துத் தீவிரமான உரையாடல்களுக்கு இடையே, 'ராதே பீ நியூஸ்' என்ற நையாண்டியான 'போலி செய்தி' பிரிவையும் தொடங்கி நடத்தி வருகிறார். 'யூடியூப்பை அரசியல் தளமாகப் பயன்படுத்திய முதல் இந்திய பயனர்களில் ராதேயும் ஒருவர்' என்கிறது 'The Print' இணைய ஊடகம்.

இதனிடையே 2017முதல் 2020ஆம் ஆண்டின் முற்பகுதி வரை, The Print இணைய தளத்தில் சில கருத்துக் கட்டுரைகளையும் எழுதினார்.

ஜூலை 2020இல், 'ராதே துருவ் ராதே வ்லாக்ஸ்' என்ற மற்றொரு யூடியூப் சேனலைத் தொடங்கினார். இதில் தனது சர்வதேச பயண பதிவுகளைப் பகிர்ந்து கொண்டார். இந்தச் சேனலும் வெற்றிகரமாக இயங்கி வருகிறது. இதை 25 லட்சம் பேர் பின் தொடர்கின்றனர். 214 காணொளிகள் பதிவேற்றியுள்ளார். இவற்றை இதுவரை 41 கோடியே 69 லட்சம் பேர் பார்த்துள்ளனர். இதில் துருவ் – ஜூலி திருமண காணொளியை மட்டும் ஒரு கோடியே 12 லட்சத்து 50 ஆயிரம் பேர் பார்த்துள்ளனர்.

Spotifyஇல் 'மஹா பாரத்' எனப்படும் ஒரு போட்காஸ்டையும் துருவ் தொகுத்து வழங்குகிறார்.

தனது காணொளிகள் வெற்றிக்குக் காரணமாக, "முடிந்தவரை எளிமையாக விஷயங்களை முன்வைப்பது, சிக்கல்களை எளிய வார்த்தைகளில் உடைப்பது தான். எளிமையாக ஒரு காரியத்தைச் செய்வது மக்கள் கவனத்தை ஈர்க்கும் என்பதைப் பார்த்து நானும் ஆச்சரியப்படுகிறேன்" என்கிறார் ராதே.

தனது காணொளிகளில் இந்திய அரசியல், கட்டுக்கதைகள், மதம், பொழுதுபோக்கு எனப் பல்வேறு தலைப்புகளில் அச்சமின்றி ஆராய்வதற்காகவே துருவ் ராதே இன்று அதிகமும் பார்க்கப்படுகிறார். தேர்தல் பத்திரத்தை எதனால் மிகப்பெரிய ஊழல் என்று சொல்கின்றனர் என்பது குறித்து புரியும்படி விரிவாக ராதே அலசிய காணொளி வெளியான 4ஆவது நாளில் 1.28 கோடி பார்வைகளைத் தாண்டியது. ஏப்ரல் 23, 2024அன்று வெளியிட்ட, 'How Millions of Indians were BRAINWASHED? | The WhatsApp Mafia' காணொளி ஒரே நாளில் ஒரு கோடியே 21 லட்சம் பார்வைகளைக்

(தொடர்ச்சி 19ஆம் பக்கம்...)




## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to all facilities. Couple /Small family preferred. Avail. immediately.
**416.613.1792 / 437.260.6478**

**NEILSON & MCLEVIN**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.802.2827**

**WHITES ROAD & TAUNTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.786.5816**

**KINGSTON & WHITES ROAD**
2 Bedrooms legal new bsmt for rent. Sep. entrance & car parking. Close to 401. Family only. Avail. immediately.
**647.853.5524/416.438.2552**

**TAUNTON & STEELES**
2 Bedrooms brand new walkout bsmt for rent. Sep. entrance, parking & launtry. Close to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.740.7292**

**NEILSON & MORNINGSIDE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.502.9432**

**HARWOOD AVE. & TAUNTON**
**Ajax, ON –** 3 Bedroom bsmt with spacious living room, 1 bathroom, 1 parking. Internet included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.625.6733**

**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, laundry, 1 parking. Close to TTC. Small family / student preferred. Avail. immediately.
**416.857.4338 / 647.332.1580**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
**647.741.5335 / 647.779.5332**

**MORNINGSIDE & STAINES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.219.4491**

34 ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com

## BASEMENT FOR RENT

**9TH LINE & HWY7**
Legally finished 2 bedrooms bsmt for rent. Sep. entrance & laundry. Close to hwy407. Avail. immediately.
**416.509.0102/416.509.4443**

**NEILSON & MCLEVIN**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to TTC, Shopping & all facilities. Avail. immediately.
**647.909.9529 / 647.770.3118**

**KENNEDY & EGLINTON**
1 Bedroom Bsmt for rent. Sep. entrance, Parking, laundry, cable & internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.719.3529**

**SHEPPARD & NEILSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, washroom, sep. laundry & parking. 5 min walk to TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.671.1717**

**KINGSTON & WHITES RD.**
1 Bedroom new bsmt for rent. Sep. entrance & parking. Close to transportation, shopping & School. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.666.3971**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom furnished walk-out bsmt apt. for rent. No parking. No pets & no smoking. Small family preferred. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.834.1081**

**MARKHAM & 16TH AVE.**
2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to go station. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.395.5914**

**MORNINGSIDE & COLLINS**
2 Bedrooms walk-out bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Close to Scarborough university. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.526.0193**

## BASEMENT FOR RENT

**KINGSTON & HWY 401 (Scarborough)**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & kitchen. Students/ Couple / small family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.278.3124**

**TAUNTON & PETER MATTHEWS**
**1** Bedrooms bsmt for rent. 1 parking. Close to all facilities. Avail. immediately.
**647.745.4416/ 647.631.5477**

**MARKHAM & STEELES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. Near by Walmart & Amazon. Avail. June 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.728.7582**

**ROSSBANK & FINCH**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.530.9724**

## ROOM FOR RENT

**TAUNTON & COUNTRY LANE**
2 Rooms for rent in a house. Close to HWY 412, bus stop & all facilities. Student preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.688.6642**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance. Students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.404.7225**

**WARDEN & ELLESMERE**
1 Bedroom for rent in a house. Close to all facilities. Avail. immediately.
**437.233.4848 / 416.274.5306**

**BRIMLEY & STEELES**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, parking & laundry. Close to TTC. Student preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.786.5816**

## ROOM FOR RENT

**KIPLING & STEELES**
1 Bedroom for rent in a Apartment. Couple /Female Preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.844.9102**

**TAUNTON & PICKERING**
2 Bedrooms for rent in a new house main floor. Close to bus stop & all facilities. Avail. immediately.
**647.203.8774 / 647.467.1622**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom with attached washroom for rent in a house. Female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.532.6841**

**9TH LINE & 14TH AVENUE**
Room for rent. Parking, laundry & internet. Close to YRT & all other facilities. Avail. May 01, 2024.
**416.648.1987 / 416.669.3549**

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom for rent in a house. Female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.0231**

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
2 Bedrooms for rent in a 3 bed rooms bsmt. Sep. entrance & internet. Avail. immediately.
**647.802.1599 / 647.963.2397**

**MARKHAM & DENISON**
1 bedroom for rent. Male preferred. Rent $600. No alcohol, no smoking & no pets. Avail. immediately.
**647.507.2148/647.864.1051**

**MCCOWAN & FINCH**
1 Bedroom in a condo. Sharing washroom, kitchen, laundry, wifi & utilities incl. Female only.
தொடர்புகளுக்கு: **647.677.9369**

**WARDEN & FINCH**
Room for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.983.7270**

**NEILSON & SHEPPARD**
1 Bedroom for rent in a main floor. No Parking. Only female preferred. Avail. immediately.
**416.875.4257 / 647.874.8393**

**MARKHAM & STEELES**
1 Room for rent in upstairs. Utilities, cable & internet included. Single working ladies preferred. Close to TTC & etc. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.720.5387**

## BASEMENT FOR RENT
**MIDDLEFIELD & FINCH**
2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, laundry & internet. Close to TTC, Datta Food & Woodside Mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.278.8723**

## BASEMENT FOR RENT
**STAINES & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable & internet. Close to all facilities. Family Preferred. Avail. immediately.
**437.267.9441/ 437.254.6329**

## BASEMENT FOR RENT
**VICTORIA PARK & ELLESMERE**
1 Bedroom + Den bsmt for rent. Sep. entrance, kitchen & laundry. Close to TTC & parkway mall. No alchocol & no smoke. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.420.9394**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & MCLEVIN**
2 Bedrooms bsmt for rent. Sep. ent rance, laundry & parking. Small family preferred. Steps to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.564.0951**

## BASEMENT FOR RENT
**MIDLAND & EGLINTON**
Newly renovated 2 Large bed rooms bsmt for rent. Sep. entrance, 1parking & laundry. Walking distance to school, TTC & subway station. Avail. immediately.
**416.757.4735 / 416.528.9683**

## BASEMENT FOR RENT
**SALEM & GILLET (Ajax)**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, 1parking & laundry. Close to school, HWY 401 & all other facilities. Small family/students/ couple preferred. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.809.3251**

## BASEMENT FOR RENT
**WARDEN & ELLESMERE**
3 Bedrooms bsmt for rent. 2 Wash rooms, sep.entrance, parking & laundry. Small family/students preferred. Close to bus stop & HWY 401 & 404. Avail. May (1st week), 2024.
தொடர்புகளுக்கு: **416.770.0178**

## HOUSE FOR RENT
**TAUNTON & GARDENS (Whitby)**
2 Bedrooms brand new town house for rent. 3 washrooms, 2 parking & utility. walking distance to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.784.4649**

**MORNINGSIDE & MCNICOLL**
4 Bedrooms house for rent. 2.5 Washrooms, 2 Parking. Steps to TTC bus. Close to all facilities. Avail June 1st 2024.
தொடர்புகளுக்கு: **647.947.3188**

**BROCK & WHITEVALE**
4 Bedrooms house for rent. 2 Parking. Avail. immediately.
**647.878.3342 / 647.613.2581**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedrooms renovated bsmt for rent. Sep. entrance, Large living room & kitchen. Close to TTC, University, Colleges, School, groceries shops & Plazas. Avail. immediately.
**416.722.6215/ 647.272.3412**

## BASEMENT FOR RENT
**VICTORIA PARK & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to Parkway Mall, TTC & HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.456.5671**

## BASEMENT FOR RENT
**NEILSON & FINCH**
Brand new 1 large bedroom bsmt for rent. Sep.entrance, 1 parking, laundry, new gas stove & large window. Young couple / student preferred. Avail. immediately.
**416.285.0249/ 416.509.4599**

## BASEMENT FOR RENT
**MORRISH & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking & sep. laundry. Close to library, schools & TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.994.7849**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & LAWRENCE**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & utilities. Close to all facilities. Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.358.9747**

## APARTMENT FOR RENT
**KENNEDY & EGLINTON**
1 Bedroom apartment for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647. 763.2760**

## CONDO. FOR RENT
**KENNEDY & HWY 401**
2 Bedrooms & 2 washrooms condo. for rent. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.0010**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & parking. Close to TTC & all other facilities. Couple preferred. No smoking & no pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.722.5519**

## BASEMENT FOR RENT
**THICKSON & DUNDAS**
1 Bedrooms Walk-out bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.856.5303**

## BASEMENT FOR RENT
**BROCK ROAD & HWY 401 (PICKERING)**
Newly renovated 2 bedrooms walkout bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. No pets. Close to bus service & all shopping stores. Avail. immediately.
**416.474.8053/905.554.4913**

## BASEMENT FOR RENT
**9TH LINE & HWY7**
Newly renovated 2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 2 walking closet, 1parking & laundry. 5 Min. walk to school. Close to Stouffville hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.594.9698**

## ROOM FOR RENT
**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom for rent in an apart ment. Shared kitchen & washroom. Famale Preferred. (55+) Avail. immediately.
**416.834.7596/ 647.609.7131**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 12,14,15

## HOUSE FOR RENT
**MIDLAND & STEELES**
3 Bedrooms bungalow house for rent. 1 Bedroom also avail able. Close to TTC & all other facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.908.6810**

## ROOM FOR RENT
**KIPLING & REXDALE**
1 Bedroom for rent in a basement. Sep. entrance, rent includes utilities & high internet, parking & laundry. Close to TTC. No pets/no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.407.1778**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & STAINES**
2 Bedrooms for rent. 1 Large room attached double sink washroom & double closet. Close to all facilities. Ladies /young family preferred. Avail. immediately.
**416.848.9697/647.888.9437**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom for rent in a town house. Shared washroom, 1 parking & internet. Working ladies only. Close to bus stop & all facilities. Avail. immediately.
**416.579.2251/647.323.3767**

## ROOM FOR RENT
**NEILSON & MCLEVIN**
1 Bedroom for rent in a bsmt. Shared kitchen & sep. washroom. Couple preferred. Walking distance to bus stop, mall & etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.333.5606**

## ROOM FOR RENT
**WARDEN & ELLESMERE**
1 large bedroom for rent in a bsmt. Parking available. Male preferred. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.569.0657**

## HOUSE FOR RENT
**MCCOWAN & FINCH**
3 Bedrooms town house for rent. 2 washrooms & 2 parking. 2 Min. walk to TTC, Mall, Juniour & high schools. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.820.2539**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**Full House, Condo, Basement & Business Units**
**647-861-8240**

## HOUSE FOR RENT

**LINDSAY ONTARIO**
3 Bedrooms house for rent. Close to all facilities.
Avail. June 01, 2024.
**647.231.9577/ 647.236.9577**

## மணமகள் தேவை

1988ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த, பிரபல நிறுவனமொன்றில் பணி யாற்றிய தற்போது Visitor visaவில் கனடாவில் தங்கியுள்ள இந்துவேளாளர் குல மணமகனுக்கு கனடாவில் visa உள்ள மணமகளைத் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: **647.535.5062**

## TAILORING

**Warden & Ellesmere** பகுதியில் **COSTCO**விற்கு அருகாமையில் சகலவிதமான தையல்களும் குறைந்த கட்டணத்துடன் பயிற்றுவிக்கப்படும். தையல் ஓடர்களும் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: **416.565.2657**

## ROOM FOR RENT

**MARKHAM & ELLESMERE**
**Bangalow house**இல் அறை உடனடியாக சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. முதியோர் மட்டும். மற்றும் **BSMT** இல் அறை ஒன்று வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **647.667.0482**

## HOUSE FOR RENT

**HWY 407 & DONALD COUSEN'S**
2 Bedrooms coach house for rent. Close to HWY 407, GO Station & other facilities.
Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.862.7056**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் Roman catholic 39 வயதான **(Graduated in Medical office Administration)** பெண்ணுக்கு மணமாகாத 39 - 42 வயதுள்ள Roman catholic மணமகனைத் தேடுகிறோம்.
**416.551.9737/ 647.937.1243**

## பராமரிப்பாளர் தேவை

சிகிச்சையின் பின் வயோதிபப் பெண்ணைப் பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் தேவை.
இடம்: **Oshawa**
காலம் - 3 வாரம்
தொடர்புகளுக்கு: **437.872.1499**

## BASEMENT & ROOM FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Also 1 Large bedroom with attached washroom for rent in the main floor.
Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.972.3710**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & NEILSON**
4 Bedrooms house & finished bsmt for rent.
4 Washrooms.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.556.4881**

## BAKERY வேலைக்கு ஆள் தேவை

**MORNINGSIDE & SHEPPARD**
பகுதியில் அமைந்துள்ள Bakery ஒன்றிற்கு Srilankan Bakery வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: **647.262.6616**

## வேலைக்கு ஆள் தேவை

**KITCHEN CABINET COMPANY**
**1. Painter**
**2. Cutting & Assemble**
**2 வருட அனுபவம் அவசியம், ஆண்கள் மட்டும்.**
தொடர்புகளுக்கு: **647.514.0431**

## HOUSE & BASEMENT FOR RENT

**BIRCHMOUNT & ST.CLAIR**
3 Bedrooms in the main floor & 1 Bedroom in the bsmt. Sep. entrance, 3 parking. Close to School, Temple, Supermarket & Warden Subway.
Avail. June 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.268.8855**

## HOUSE/BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE & BASEMENT FOR RENT

**AJAX –** 3 Bedrooms & 3 bathrooms house for rent.
**MCCOWAN & SHEPPARD (Scarborough) –** 3 Bedrooms & 3 bathrooms house for rent.
**NEILSON & FINCH –** 1 Bedroom & 1 bathroom basement for rent.
**TAUNTON & WHITES ROAD (Pickering) –** Brand new 4 bedrooms & 4 bathrooms house basement for rent.
**Please call or text – 647.269.0193**

## HOUSE & BASEMENT FOR RENT

**KINGSTON & BROCK**
2 Bedrooms house for rent & 2 Bedroom basement for rent.
**WHITES & TAUNTON**
2 Bedroom basement for rent.
தொடர்புகளுக்கு: **416.844.9102**

## HOUSE FOR RENT

**PHARMACY & LAWRENCE**
3 + 3 Bedrooms full bangalow house for rent. 2 full washrooms & 4 parking.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.271.5420**

## HOUSE FOR RENT

**MARKHAM & STEELES**
3 Bedrooms & 2 $^{1}/_{2}$ washrooms house for rent. Parking available. Close to all facilities.
Avail. May 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.529.2190**

## HOUSE FOR SALE

**SIMCOE & ADELAIDE**
**(OSHAWA)**
3 Bedrooms & 4 washrooms detached house for sale. Close to School & all other facilities.
தொடர்புகளுக்கு: **647.764.1649**




மேலும் பக்கங்கள் 12, 13, 15

## HOUSE FOR RENT

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom bungalow house for rent. 1 washroom, laundry, kitchen & 2 car parking (Garage & **driveway**)
Close to all the facilities. Avail. July 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.712.5223 / 416.438.3724**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**
**Multiple bedrooms available with bathroom & kitchen.**
தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும்.
**Close to TTC (2 Buses). Contact owner about renting price.**
தொடர்புகளுக்கு: **416.908.9494**

## நீங்களும் முதலாளியாக விரும்பமா? *ZERO TO HERO*

**உங்களுக்கு அனுபவமான துறையில் சொந்தமாக வியாபாரம் ஆரம்பிக்க ஆர்வம் இருந்தால் அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்**
- வங்கிக்கடன் ***(Loan)*** • ***Partnership*** • அறிவுரை ***(Consultation)***
- ***2nd Mortgage*** • புதிய வியாபாரம் ஆரம்பித்தல்
- ***Existing business improvement*** • ***Small business Loan***

அழையுங்கள் – சத்தி - **647.838.2378**

# JOB VACANCY

## OFFICE ADMINISTRATOR / RECRUITERS

**LOCATION – SCARBOROUGH/BRAMPTON** (Full time / Part time)
**Requirement – University Degree with excellent communication skills in English & Tamil**
If you're interested, please contact for more details.
**416.918.9848 /416.857.7603**

## வேலைக்கு ஆட்கள் தேவை – FULL TIME / PART TIME

## CHEF, LINE COOK & BREAKFAST COOK

**GERRARD & COXWELL** இல் அமைந்துள்ள **Canadian Restaurant** ஒன்றிற்கு **Chef, line Cook & Breakfast cook** போன்ற வேலைகளிற்கு குறைந்தது 5 வருட அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்புகளுக்கு:
**Call : 416.220.9179 / Email: chadsenagroup@gmail.com**







மேலும் பக்கங்கள் 12, 13, 14

## wpm Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

***Mississauga*** – Dundas Street/Wolfdale Road- Basement
(2Brm + 1Bath + 1 Parking) **[$2100/month]**
***Clarington*** -_ Port Darlingtonrd &Bennette Rd- Full house
(3Brm + 3Bath + 2 Parking) **[$2800/month]**
***Pickering*** – Brock & Whitevale - Basement
(2Brm + 1Bath + 1 Parking) **[$2000/month]**
***Oshawa*** – Harmony/ Olive – Basement
(1Brm + 1Bath + 1 parking) **[$1450.00/month)**
**Scarborough** - Mccowan & Lawrence - Full House
(2Brm + 2Bath) + 2 Kitchen **[$3,900/month]**
***Scarborough*** – Mccowan & Lawrence– Basement
(2Brm + 1Bath) **[$2,400 with utilities / month)**

**Available for Rent**

***Pickering*** – Whitevale Rd/Mulberry Lane - Detached
(4Brm + 4Bath) **[$3,400/m]**
***Whitby*** – Country Lane & Southwell Ave Basement
(2Brm + 1Bath) **[$1600/month]**
***Mississauga***– Confederation / Burnhamthope -Condo
(1Brm + 1Bath) **[$2600/month]**
*Oshawa* – Simcoe St N/Adelaide Ave E – Bungalow
(3Brm + 2Bath) **[$2,600/m]**
***Porthope*** – Walton St/Ontario St– Apartment
(2Brm + 1Bath) **[$1,999/month]**
***Scarborough*** – Kingston Rd & Eglinton Ave E–Condo
(1 Brm +1Bath + 2 parking) **[$ 2500/month]**

## BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management** துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

**கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999**


**We are managing Condos, Houses, Apartments in the area of Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.**

# 5ஆம் உலகத் திருக்குறள் மகாநாடு– சிக்காகோ

குமுளன் - கனடா

5ஆம் உலகத் திருக்குறள் மகாநாடு, 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் 6ஆம் 7ஆம் திகதிகளில் சிக்காகோ மா நகரில், செரற்றன் விடுதியில் இடம் பெற்றது. இந்தியா, இலங்கை, பெரிய பிரித்தானியா, கனடா, உட்பட பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்த ஆய்வறிஞர்களின் திருக்குறள் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள், மருத்துவர்களான கேசவன், ஜானகிராமன், சம்பந்தம் மற்றும் பொறியியலாளரான துக்காராம் முதலிய அறிஞர்களின் பெயர் கொண்ட அரங்குகளில் படிக்கப்பட்டன. மேற்படி அரங்குகளில் ஒரே நேரத்தில் ஆய்வுரைகள் நிகழ்த்தப்பட்டன. மிகக்கனதியான அறிஞர்களின் முன்னிலையில் கட்டுரைகள் முன்னிலைப்படுத்தப்பட்டு தொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடைகளும் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

கனடாவில் இருந்து அனுப்பப்பட்ட கட்டுரைகளில் ஏழுகட்டுரைகள் மாநாட்டில் சமர்ப்பிப்பதற்காகத் தெரிவு செய்யப் பட்டிருந்தன. பேராசிரியர் நா. சுப்பிரமணியன், 'திருக்குறள் உருவாக்கத்தில் பண்டைய தமிழ்ச் சிந்தனைகளின்



பங்களிப்பு - ஒரு நுண்ணாய்வு', முனைவர் கௌசல்யா சுப்பிரமணியன் 'ஒப்பியல் நோக்கில் திருக்குறளும் நாலடியாரும் நிலையாமைபற்றிய அவற்றின் சிந்தனைகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு', பொறியியலாளர் திரு. குமார் புனிதவேல், 'Ethics of Thirukkural given to the world by Leo Tolstoy' ஆங்கில மொழியிலான கட்டுரையும், முனைவர் செல்வநாயகி சிறீதாஸ், 'திருக்குறளும் ஆசீவகமும் - ஒப்பாய்வு', திரு. த. சிவபாலு 'திருவள்ளுவரும் மாக்கியவல்லியும் - ஒரு ஒப்பீட்டுநோக்கு' மற்றும் 'திருக் குறளும் கனடா அரசியல் நடைமுறையும்- ஒரு ஒப்பீட்டு நோக்கு' Dr. பாலசிவகடாட்சம் 'திருக்குறளும் சமணமும்' மற்றும் சின்னையா சிவனேசன் 'Scientific facts in Thirukkural' ஆகிய ஆய்வுரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. முனைவர்கள் கௌசல்யா சுப்பிரமணியன், நா. சுப்பிரமணியன், செல்வநாயகி சிறீதாஸ் திருவாளர்கள்



குமார் புனிதவேல், சிவபாலு தங்கராசா ஆகியோர் வருகைதந்து ஆய்வுக் கட்டுரைகளை ஒப்படைத்து உரை யாற்றியதோடு கலந்துரை யாடல்களிலும் கலந்து கொண்டனர்.

பெரிய பிரித்தானியாவிலிருந்து வருகை தந்திருந்த சட்டத்தரணி செல்லத்தம்பி சிறிஸ்கந்தராசா 'The relevence of the Thirukkural to our world conflict' என்னும் ஆங்கிலமொழியிலான கட்டுரையும், ஈழத்தில் இருந்து வருகை தந்திருந்த கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் 'திருக்குறள் காமத்துப்பாலும் மன்யோசு அகப்பாடல்களும் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு' மற்றும் ஜப்பானில் இருந்து வருகை தந்திருந்த தாமாஸ் கிட்டோஷி புறூக்ஸ்மா 'Thirukkural and Lyric Philosophy' அதேபோன்று பாங்கொக்கில் இருந்து வந்திருந்த தமிழ் ஆய்வாளர் முனைவர் சித்திரா சிவகுமாரன் 'சீன தாவோ தேஜிங் மற்றும் தமிழ் திருக் குறள் ஒப்புமைகள்' பற்றியும் ஆய்வுக் கட்டுரையினைச் சமர்ப்பித்து உரையாற்றியமையை அவதானிக்க முடிந்தது.

நான்கு அறைகளில் பல ஆய்வறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகள் வாசிப்பு இடம் பெற்றிருந்தன. எனினும் அனைத்தையும் பார்க்கும் வாய்ப்பு அனைவருக்கும் கிட்டவில்லை என்பதும் உண்மை. ஏறக் குறைய 600க்கு மேற்பட்ட கட்டுரைகள் வந்துள்ளபோதும் அவற்றுள் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 வரையான கட்டுரைகள் வாசிக்கப்பட்டன எனத் தெரியவருகின்றது. அனைத்துக் கட்டுரைகளையும் ஒப்படைத்து உரையாற்ற நேரம் கருதித் தரப்படவில்லை என்பது அமைப்புக் குழுவினரின் கருத்தாகக் காணப்பட்டது.

பேராசிரியர் சண்முகதாஸ் 'திருக்குறளும் தமிழ் இலக்கிய செழுமைபற்றிய தொடர்பு' குறித்த சிறப்புரையை மகாநாட்டு மண்டபத்தில் இரண்டாம் நாள் ஆற்றியிருந்தார். அவரது உரையில் தமிழ் இலக்கியத்தின் சிறப்பும் தொடர்பும் பற்றிய செய்திகள் முன்வைக்கப்பட்டமை பலரதும் பாராட்டுகளைப் பெற்றுக்கொண்டது.

தொடக்க உரையை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் சொலமன் பாப்பையா தொடக்கி வைத்து இரத்தினச்சுருக்கமாக உரையாற்றினார். தொடர்ந்து தமிழாராய்ச்சி நிறுவனத்தின் துணைத்தலைவர் Dr. P. மருதநாயகம் அவர்களும் உரையாற்றும்போது தமிழின் சிறப்பும் திருக்குறளின் மேன்மையும் பற்றி தாவோ சே ஜிங்கைத் தொடர்புபடுத்தி ஆங்கிலத்தில் தந்திருந்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சிக்காக்கோவின் அமெரிக்க மக்களவையின் பிரதிநிதி ராஜா கிருஸ்ணமூர்த்தி, சிகாகோ தமிழ்ச் சங்கத் தலைவர் நம்பிராஜன் வைத்திலிங்கம், மகாநாட்டு அமைப்புக்குழுத் தலைவர் அரசர் அருளாளர், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவைத் தலைவரும் சிக்காக்கோ தமிழ்ச்சங்கத் துணைத்தலைவருமான முனைவர் பால சுவாமிநாதன், உட்பட திருக்குறள் மகாநாட்டு அமைப்பின் தலைவர் Dr. G. ஜோன் சாமுவேல் அவர்கள் ஐநாவின் அங்கீகாரத்திற்கு இவ்வித மகாநாடுகளை நடத்துவதன் அவசியத்தை எடுத்துரைத்து அதனை விரிவாக்கவேண்டிய நிலையை விளக்கி உரையாற்றினார். அவரோடு லீட்சில் இருந்து அதன் செயலாளர் பேராசிரியர் Dr. டானியல் ஜெயராஜ் அவர்களும் வருகை தந்து மகாநாட்டு ஏற்பாடுகளைக் கவனித்திருந்தனர்.



அவ்விதமே ஐக்கிய அமெரிக்காவில் உள்ள பல்வேறு அறிஞர்களும், இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த ஆய்வறிஞர்களும் தங்கள் கட்டுரைகளை முதனிலைப்படுத்தியிருந்தனர்.

5ஆம் திகதி நிகழ்வாக அமெரிக்கத் தமிழ்ப் பள்ளி மாணவர்களின் பாடல்கள், சிகாகோ இசைக் கலைஞர்களின் இன்னிசை நிகழ்ச்சி என்பன இடம் பெற்றன.

6ஆம் திகதி காலை 10மணிக்கு ஆரம்பித்த நிகழ்வு இரவு 10 மணிவரை தொடர்ந்து நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. கலைநிகழ்ச்சிகளாக: சிலம்பாட்டம், ஒயிலாட்டம், துடும்பாட்டம், தேவராட்டம், குற்றால குறவஞ்சி நாட்டிய நாடகம், வினாடிவினா, குழு நடனங்கள் போன்றவையும் இரு அணிகளுக்கிடையேயான எனக்குப் பிடித்த குறள் தொடர்பான கலந்துரையாடல் என்பனவும் இடம் பெற்றன. இவற்றோடு பொன் பறை என்னும் நிகழ்வு பெருந்தொகையான கலைஞர்களை உள்ளடக்கியதாக மேடையேற்றப்பட்டது. பண்டைக்கால தமிழரின் பறையிசையின் மேன்மையை எடுத்துக் காட்டுவதாகவும் இசையால் உளவளத்தை

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)



# கனடாவில் நடந்த 'நூல்களின் சங்கமம்' புத்தகக் கண்காட்சி



குரு அரவிந்தன்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 30வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாகவும், உலகப் புத்தகத் தினத்தைக் கொண்டாடும் முகமாகவும் ஏப்ரல் 20, 2024 சனிக்கிழமை அன்று ரொறொன்ரோ



வில் கனடியத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டும், விற்பனைக்கும் கனடியத் தமிழ் எழுத்தாளர் இணையத்தால் வைக்கப்பட்டிருந்தன. கனடாவின் பல பாகங்களில் இருந்தும் மிகப் பெரிய அளவில் பொது மக்கள் கலந்துகொண்டு இந்நிகழ்வுக்கு ஆதரவு நல்கினர். முக்கியமாக இளைய தலைமுறையினரும், சிறுவர்களும் பெற்றோருடன் வந்து கலந்துகொண்டு தமக்கு விரும்பிய நூல்களை வாங்கிச் சென்றது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் அடுத்த தலைமுறையினரிடம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும், இந்த மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்க வேண்டும் என்ற எழுத்தாளர் இணையத்தின் ஆதங்கத்தை நிறைவேற்றவும் இந்த நிகழ்வு பெரும் உதவியாக இருந்தது.

கனடாவில் இதுபோன்றதொரு தமிழ் நூல்களின் சங்கம நிகழ்வு நடப்பது இதுவே முதற்தடவையாகும். சுமார் 50 இற்கும் மேற்பட்ட நூலாசிரியர்கள், பதிப்பகத்தினர், ஊடக நிறுவனங்கள்





தங்கள் ஆக்கங்களை இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தி இருந்தனர். கனடா எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், கட்டுரைத் தொகுப்புகள், கவிதைத் தொகுப்புகள், மஞ்சரிகள், மற்றும் ஏனைய தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் என்று பலவிதமான இலக்கிய ஆக்கங்களும் இடம்பெற்று இருந்தன.

காலை 10 மணியளவில் மங்கல விளக்கேற்றியதைத் தொடர்ந்து கனடா தேசியப்பண், தமிழ்த்தாய் வாழ்த்து, அகவணக்கம் ஆகியன இடம்பெற்றன. தொடர்ந்து பொருளாளர் க. ரவீந்திரநாதனின் வரவேற்புரையும், தலைவர் அகணி சுரேஸ் அவர்களின் தலைமையுரையும் இடம்பெற்றன. அடுத்து மதிப்புக்குரிய பாஸ்ரர் ஜெயானந்தசோதி அவர்களின் வாழ்த்துரையும், தொடர்ந்து துணைத்தலைவரும், ஒழுங்கமைப்பாளர்களில் ஒருவருமான எழுத்தாளர் குரு அரவிந்தனின் உரையும் இடம்பெற்றன.



குரு அரவிந்தன் தனது உரையில் ரொறொன்ரோவில் நடக்கும் இதுபோன்ற முதல் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும், குறிப்பாக வெற்றிகரமாக இந்த நிகழ்வு நடப்பதற்கு உதவியாக இருந்த இளைய தலைமுறையினருக்கும், நூல்களைக் காட்சிப்படுத்தியோருக்கும், ஊடகவியலாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார். பொது அறிவை விருத்தி செய்யவும், எமது வரலாற்றைப் புரிந்து கொள்ளவும், எங்கள் மொழி இந்த மண்ணில் நிலைத்து நிற்கவும் இது போன்ற நூல்களின் கண்காட்சி இளைய தலைமுறையினருக்குப் பெரிதும் உதவியாக அமையும் என்பதை எடுத்துக் குறிப்பிட்டு, இது போன்ற ஒரு நிகழ்வை ஏற்படுத்திக் கொடுத்த கனடா தமிழ் எழுத்தாளர் இணைய நிர்வாகக் குழுவினருக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது சுமார் 10 எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை வெளியிட்டும், அறிமுகம் செய்தும் வைத்தனர். இரண்டு மணியளவில் கனடாவில் பிறந்து வளர்ந்த இளைய தலைமுறையினர் பங்குபற்றிய பட்டிமன்றம், நடனம், உரைகள், திருக்குறள் சார்ந்த உரைகள் போன்ற பயன்தரும் நிகழ்வுகளும் தமிழில் இடம் பெற்றன. பெற்றோர்கள் மிகவும் ஆர்வத்தோடு சிறுவர்களின் பங்களிப்பைப் பார்த்து ரசித்தனர். இதைவிட வாசகர்கள் தங்கள் அபிமான எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் மற்றும் கட்டுரையாளர்களையும் நேரடியாகச் சந்தித்து உரையாடவும், கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் இந்த நிகழ்வு அவர்களுக்கு ஒரு அருமையான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. கௌரவ அரசியல் பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வின்போது, மதிய உணவும், சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன. மாலை 5 மணியளவில் இணையத்தின் செயலாளர் கமலவதனா சுந்தாவின் நன்றி உரையுடன் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

## 5ஆம் ...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

வளர்க்கமுடியும் என்பதையும் எடுத்துக் காட்டும் முகமாக உளவளர்ச்சியில் மந்த கதியில் உள்ளவர்களையும் உள்ளடக்கியிருந்தமை பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஐக்கிய அமெரிக்காவின் பலபாகங்களில் இருந்தும் வருகை தந்திருந்த கலைஞர்களின் நிகழ்ச்சிகள் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்துக் கொண்டமை கருத்திற் கொள்ளற்பாலது. 'குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகம்' சிறப்பாகக் காணப்பட்டது எனினும் இன்னும் சற்று சுறுசுறுப்பாகவும் விறுவிறுப்பாகவும் இடம் பெற்றிருக்கலாம் என்ற கருத்தும் சபையோரிடமிருந்து வெளிப்பட்டமையைக் கேட்கக்கூடியதாக இருந்தது. அத்தோடு திருக்குறளில் இருந்து ஒரு கருப்பொருளாக அமைந்திருக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டிருந்தது.

"கொல்லான் புலான் உண்ணானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" என்னும் கூற்றுக்கு மாறாக மாமிச உணவினை விருந்துபடைத்தமை சிலரின் முகத்தைச் சுளிக்கவும் செய்தது என்பதும் உண்மைதான். எனினும் பெரும்பான்மையினரின் விருப்பத்தையும் நிறைவேற்ற வேண்டிய நியதியும் அமைப்பாளர்களுக்கு உண்டு என்பதும் மறுப்பதற்கில்லை.

மிகச் சிரமத்தின் மத்தியில் அவசர அவசரமாக மகாநாட்டை ஒப்பேற்றி முடித்த மகாநாட்டுக்குழு 'விருந்தோம்பல்' பண்பாடு வியக்கவைத்தது. அதற்காகப் பொறுப்போடு உழைத்தவர்களைப் பாராட்டாமல் விடமுடியாது. அத்தோடு எதனை உண்பது என்ற மனம் பேதலிக்கும் அளவிற்கு விருந்தோம்பல் முதன்மை பெற்றிருந்தமை பாராட்டற்குரியது.



பொறுப்புக்களை மிக நுட்பமாகவும் நிதானமாகவும் அணுகி, தங்கள் வேலைப் பழுக்களுக்கு இடையேயும் திருக்குறள் மகாநாட்டை அமைப்புக்குழு செய்திருந்தமை பாராட்டத்தக்கது.

கலை நிகழ்வுகள் எதிர்காலச் சந்ததியினரை உள்வாங்கும் வகையில் முதன்மை கொடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் மகாநாட்டிலிருந்து கற்றுக்கொண்டது என்ன? என்ற கேள்விக்குப் பதில் திருப்திகரமாக அமையவில்லை என்பதை வருகை தந்திருந்த கல்வியாளர்கள், ஆய்வறிஞர்கள் சுட்டிக்காட்டவும் தவறவில்லை.



சிக்காக்கோ தமிழ்ச்சங்கத் துணைத் தலைவரும் மகாநாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் துணைத்தலைவருமான சரவணன்குமார் மணியன் மற்றும் அவரது குழுவினரின் வரவேற்பும் ஓடி ஓடிக் கவனித்துக் கொண்டமையும் போற்றுதற்குரியதாக இறுதிவரை நின்று அனைவரையும் வழியனுப்பிவைக்கும் வரை அங்கேயே தங்கியிருந்து செயற்பட்டமையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவர்களின் அன்பான உரையாடலையும் பராமரிப்பையும் என்றுமே மனதிலிருந்து அகற்றமுடியாதபடி அமைந்துவிட்டது. வள்ளுவன் காட்டிய செய்நன்றியை மறக்க முடியாததாக அவர்களது செயற்பாடு அமைந்திருந்தமையே காரணமாகும்.

மகாநாட்டை ஒட்டி வெளியீடு செய்யப்பட்ட நூலில் இந்திய அறிஞர்களின் கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன. ஆனால் ஈழத்தில் இருந்து அழைக்கப்பட்ட தமிழாராய்ச்சி மகாநாட்டுத் துணைத் தலைவர் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ் அவர்களின் உரை இடம்பெறாதமை பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் தள்ளாத வயதிலும் அழைப்பை ஏற்று வந்துள்ளார் என்றால் அவரது உரை இறுதி நாளுக்குத் தள்ளப்பட்டது மட்டுமல்ல விழா ஆரம்பத்தில் மேடைக்கே அழைக்கப்படாமல் புறத்தொதுக்கப்பட்டமை ஈழத்தவர்களை முகம் சுழிக்க வைத்துள்ளது என்பதற்கு அவர்கள் இறுதிநாள் நிகழ்வில் மக்கள் கூட்டமற்ற நிலையில் அவரை உரையாற்ற அழைத்தமை வேண்டுமென்றே பின்னுக்குத் தள்ளியதாக உணரமுடிகின்றது. வள்ளுவரை முதன்மைப்படுத்தி சங்க இலக்கியங்களை வழிநூலாகக் கண்டு ஆற்றிய உரை மிகச் சிறப்பு வாய்ந்ததாக அமைந்திருந்தது. ஆனால் அவரது உரை ஏன் அந்த விழா வெளியீட்டில் இடம்பெறவில்லை என்பது ஈழத்தமிழரைக் குறைத்து மதிப்பிடுவதாகவே கருத முடிகின்றது. விழா எடுப்போர் தங்களை முதனிலைப் படுத்துவது தவறல்ல ஆனால் முக்கியமானவர்களை கௌரவிப்பதும் அவர்களுக்குரிய கௌரவத்தை அளிப்பதும் தமிழர் சால்பு என்பதோடு வள்ளுவனுக்கு எடுக்கப் பட்ட விழாவில் இவ்வித பெரியோரை மதிக்காது நடத்துதலை இனியாவது கருத்திற்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையை "இன்னா செய்தாரை ஒறுத்தலாக" அமையாது "அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்பதை மனதிருத்தி அனைவரும் ஒருசேர மதித்தொழுகவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

# 'பசி' துரை – காலம் கடந்த காவியங்கள் தந்தவர்

கண்ணன்

தமிழ் திரையுலகில் மிகப்பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்ற படங்களில் ஒன்று 'பசி'. தமிழின் தலைசிறந்த 100 திரைப் படங்களில் ஒன்றாகவும் இப்படம் போற்றப்படுகிறது. இதனால், இதன் இயக்குநர் துரை, படத்தின் பெயருடனே இணைத்து 'பசி' துரை என்றே அழைக்கப்பட்டார். வயது மூப்பின் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக திரைத்துறையில் இருந்து ஒதுங்கியிருந்த துரை (வயது 84) சமீபத்தில் காலமானார்.

## ஒட்டேரியில் தொடங்கிய கனவு

'பசி' துரையின் இயற்பெயர் செல்லதுரை. தமிழ்நாட்டில் திருநெல்வேலியைச் சேர்ந்த சாமுவேல் ஜாக்கப் - தஞ்சாவூரைச் சேர்ந்த ராஜம்மாள் தம்பதிக்கு மகனாக பெப்ரவரி 02, 1940அன்று பிறந்தவர். தந்தை சென்னை ஆவடியிலுள்ள ஆர்டினன்ஸ் தொழிற்சாலையில் வேலை பார்த்தார். தாய் சென்னை அம்பத்தூரிலுள்ள ஒரு பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்த்தார். இதனால், சென்னை ஓட்டேரியிலுள்ள ஒரு பள்ளியில்தான் செல்லத்துரை படித்தார். ஆனால், படிப்பில் செல்லத்துரைக்கு சிறிதும் ஆர்வமில்லை. அதேநேரம் சிறுவயதிலேயே திரைப்படம் பார்ப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது.

சிறுவயதிலேயே திரைக்கதை சொல்வதிலும் இருந்த ஆர்வம் காரணமாக ரேவதி ஸ்டுடியோவில் அலுவலக உதவியாளனாக தன் திரை வாழ்க்கையைத் தொடங்கினார். பின் கன்னட இயக்குநர்களான ஜி.வி. அய்யர், புட்டண்ண கனகல் ஆகியோரிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்தார். தொடர்ந்து, திரைப்படம் சம்பந்தப்பட்ட வேலைகளில் தேர்ந்த செல்லத்துரை, கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து திரைப்பட இயக்குநர் ஆனார். இயக்குநர் மட்டுமன்றி கதாசிரியர், தயாரிப்பாளர் என்ற பன்முகத் திறமை கொண்டவர் துரை.

## முதல் படம்

இயக்குநராக துரை அறிமுகமான முதல் திரைப்படம் 'அவளும் பெண்தானே' (1975). இப்படத்தில் முத்துராமன், சுமித்ரா, எஸ்.வி. சகஸ்ரநாமம், பண்டரிபாய், தேங்காய் சீனிவாசன், வி. கே. ராமசாமி, மனோரமா, காந்திமதி உட்பட பலரும் நடித்திருந்தனர். 'ஸ்ரீ பாண்டுரங்கா புரொடக்சன்ஸ்' என்ற பெயரில் நடிகை பண்டரிபாய் இப்படத்தைத் தயாரித்தார்.

'அவளும் பெண் தானே' விமர்சன ரீதியாகவும் வணிக ரீதியாகவும் வெற்றி பெற்றது. பாலியல் தொழிலாளியின் வாழ்வைக் களமாகக் கொண்ட இப்படம் பற்றி 'கல்கி' இதழில், 'துணிச்சலாகப் புனையப்பட்ட படம்' என்று விமர்சனம் எழுதியிருந்தனர். மேலும், 'துரை எழுதிய வசனங்களுக்கு நூறு மதிப்பெண்கள் கொடுக்க வேண்டும்' என்றும் கூறியிருந்தனர்.

'அவளும் பெண் தானே' படத்திற்காக துரைக்கு, இந்தியாவில் திரைப் படங்களுக்காக வழங்கப்படும் விருதுகளில் உயரியதான, ஒன்றிய அரசின் தேசிய விருது கொடுக்கப்பட்டது. இது தவிர தமிழ்நாடு அரசு வழங்கும் சிறந்த இயக்குநருக்கான விருது, கலைமாமணி விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



## ரஜினி நடிப்பில் ஒரே ஆண்டில் மூன்று படங்கள்

முதல் படத்திலேயே வித்தியாசமான கருத்துகளால் தமிழ்த் திரை ரசிகர்களை நிமிர்ந்து பார்க்க வைத்த துரை தொடர்ந்து வெற்றிப்பட இயக்குநராக வணிக படங்களை இயக்கி வந்தார். ரஜினிகாந்த் நடிப்பில் 'பாவத்தின் சம்பளம்' (1978), 'சதுரங்கம்' (1978), 'ஆயிரம் ஜென்மங்கள்' (1978) கமல்ஹாசன் நடிப்பில் 'நீயா' (1979), 'பசி' (1979), சிவாஜி கணேசன் நடிப்பில் 'துணை' (1982) உட்பட மொத்தம் 47 திரைப்படங்களை துரை இயக்கியுள்ளார்.

தமிழ் தவிர தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகளிலும் துரை படங்கள் இயக்கியுள்ளார். இந்தியில் 'தோ அவுர் குலாப்', 'பெட் பியார் அவு பாப்' போன்றவை துரையின் குறிப்பிடத்தக்க படங்கள்.

ஏழை மக்களின் வாழ்க்கையை எதார்த்தமாக திரைப்படங்களில் எடுத்துக் கூறியதற்கு இவருக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது.

### திரைப்பட வாழ்வில் திருப்புமுனை

டிசம்பர் 21, 1979ஆம் ஆண்டு வெளியான 'பசி' துரையின் திரை வாழ்க்கையில் ஒரு திருப்புமுனைத் திரைப்படமாக அமைந்தது.

வட இந்திய திரையுலகில் 1970களில் உருவான 'மிடில் சினிமா அலை' தமிழ் திரையுலகை 'பதினாறு வயதினிலே' படம் மூலம் தாக்கத் தொடங்கியது. அந்த அலையில் உருவான குறிப்பிடத்தக்க படம்தான் 'பசி'. பாரதிராஜாவைப் போல இவரும் கன்னட இயக்குநர் புட்டண்ணா கனகலிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மகேந்திரன், பாரதிராஜா, பாலுமகேந்திரா, பாலசந்தர் என 1970களில் எழும்பி வந்த தமிழின் 'மிடில் சினிமா அலை' எதார்த்த திரைப்படங்கள் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுவர, துரைக்கும் அப்படியொரு திரைப்படம் இயக்க ஆசை வந்தது. ஒருநாள் அவர் பயணித்த ரிக்ஷாவை ஓட்டி வந்த தொழிலாளி, "ஏன் சார் எல்லாரும் பணக்காரங்களைப் பத்தியே படம் எடுக்குறீங்க. எங்களை மாதிரி சேரியிலையும் குடிசைங்களையும் வந்து பாருங்க, ஏகப்பட்ட கதை இருக்கு" எனச் சொன்னார். அந்த ரிக்ஷா ஓட்டுநர் சொன்ன வார்த்தைகள் துரை மனதில் உண்டாக்கிய விதைதான் 'பசி' எனும் தமிழ் திரை பொக்கிஷம்.

ஜெயபாரதி, கமல்ஹாசன் உள்ளிட்டோர் நடித்திருந்த இப்படம் சென்னையில் கூவம் ஆற்றின் கரையோரம் வாழும் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டிருந்தது. நகரத்தின் கடைக்கோடியில் வாழும் மக்களின் பாடுகளையும் மிகவும் எளிய வாழ்க்கையையும் மிகவும் உண்மையாகவும் நேர்த்தியாகவும் இந்தப் படத்தில் துரை சொல்லியிருந்தார்.




சிறந்த இயக்குநர், சிறந்த திரைப்படம், சிறந்த நடிகை என்று மூன்று தேசிய விருதுகளோடு மாநில அரசு விருதுகள், பிலிம்பேர் விருதுகள் என பல்வேறு விருதுகளை இந்தத் திரைப்படம் குவித்ததுடன், துரையை இந்திய அளவில் சிறந்த இயக்குநர்களில் ஒருவராக அறிமுகப்படுத்தியது. 1980ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடந்த 'டாஷ்கண்ட்' திரைப்பட விழாவில் சிறந்த படத்துக்கான விருதையும் 'பசி' பெற்றது.

## காலம்கடந்த காவியம்

'பசி' துரையின் நிகரற்ற படம் என்றால் காலங்கடந்த காதல் காவியம் அவருடைய 'கிளிஞ்சல்கள்'. இன்றைய தலைமுறையினரும் பார்த்து நெகிழும் படம் இது.

'கிளிஞ்சல்கள்' 1981ஆம் ஆண்டு வெளிவந்தது. இத்திரைப்படத்தில் மோகன், பூர்ணிமா ஜெயராம் உட்பட பலரும் நடித்திருந்தனர்.

இந்து மதத்தைச் சார்ந்த இளைஞன் பாபு கிறித்தவப் பெண் ஜூலி. இருவரும் காதலர்கள். ஆனால், மத வேறுபாடு காரணமாக இரு வீட்டாரும் காதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். கடும் எதிர்ப்பையும் மீறி, பாபு - ஜூலி இருவரும் தங்கள் காதலில் உறுதியாக இருக்கின்றனர். இதனால், ஜூலியின் தந்தை ஸ்ரீபன் அவளை ஓர் அறையில் பூட்டி வைக்கிறார். பாபுவின் தந்தை மாணிக்கமும் அவரை வீட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கவில்லை. இந் நிலையில், அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தும் விதமாக ஜூலி தற்கொலை செய்துகொள்கிறார். இதைக் கேள்விப்பட்டு சுடுகாட்டிற்கு விரைந்து செல்லும் பாபு, ஜூலியின் உடலை தகனம் செய்யும் போதே இறந்துவிடுகிறார்.

'கிளிஞ்சல்கள்' விமர்சனரீதியாகவும் வசூல்ரீதியாகவும் மாபெரும் வெற்றிப் படமாக அமைந்தது. 175 நாட்கள் வெற்றிகரமாக ஓடியது.

திரைத்துறையில் 1990ஆம் ஆண்டு வெளியான 'புதிய அத்தியாயம்' படத்துக்குப் பின்னர் திரையுலகில் இருந்து துரை ஒதுங்கினார். இவருக்கு இரண்டு மகன்கள், ஒரு மகள். அவருடைய மகன்கள் யாரும் திரைத்துறையில் இல்லை. வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடைசிக் காலத்தில் ரஜினியின் அறிவுறுத்தலின்படி சென்னையை அடுத்த புறநகரில் வேப்பம்பட்டு என்ற இடத்தில் ஒரு கல்யாண மண்டபத்தை நிறுவினார், துரை. அதன் மேற்பகுதியில் அவர் குடியிருந்து கொண்டு, கீழ்ப்பகுதியைக் கல்யாண காரியங்களுக்காக வாடகைக்கு விட்டுவந்தார்.

இந்நிலையில் உடல் நலக்குறைவு காரணமாக துரை ஏப்ரல் 22, 2024அன்று உயிரிழந்தார்.



# ஆழ்ந்த இரங்கல் ஈழவேந்தன் ஐயா

## 14 செப்ரெம்பர் 1932– 28 ஏப்பிரல் 2024



தமிழ் மொழிப்பற்றாளர் ஈழவேந்தன் ஐயா ரொறொன்ரோவில் ஏப்ரல் 28, 2024 அன்று தனது 92ஆவது வயதில் காலமானார். “ஈழம் வெல்லும் அதை காலம் சொல்லும்” என்ற குரல் இன்று ஓய்ந்து விட்டது.

மாணிக்கவாசகர் கனகசபாபதி கனகேந்திரன் என்ற இயற்பெயர் கொண்ட இவர் தனது பெயரை தூய தமிழில் ஈழவேந்தன் என மாற்றிய தமிழ் மொழிப்பற்றாளர்.

நல்லூரைச் சேர்ந்த புகையிரத நிலைய அதிபர் கனகசபாபதி அவர்களின் மகனான ஐயா யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரியிலும், பின்னர் கொழும்பு உவெசுலி கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

தமிழீழக் கொள்கையில் மிகவும் பிடிப் புள்ளவராக சமரசமில்லாத போராளியாக இறுதிவரை இருந்தவர்.

இவரின் துணைவியார் அருளாம்பிகை அம்மா சுகயீனமுற்ற நிலையில் தமிழகத்தில் மகளோடு வாழ்கிறார். இவருக்கு இரு மகள்கள் உண்டு.

இனத்திற்காக இறுதிவரை உண்மைக் குரலாகவும் உணர்வுள்ள எழுத்தாகவும் குரல் கொடுத்துக் கொண்டேயிருந்தார்..

திரு. மா.க. ஈழவேந்தன் 2004ஆம் ஆண்டு தொடக்கம் 2007ஆம் ஆண்டு வரை இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார்.

அவரது தமிழ் நடைஉரை ஆயிரம் நூல்கள் கரைத்துக் குடித்த அறிவுப் பெருக்கு ஊற்றாக, அருவியாக, காட்டாறாக, கடலாகப் பெருகி ஓடும்.

இன்று அந்த அறிஞரின் உயிரே எம்மைப் பிரிந்து போய்விட்டது. ஓயாமல் பேசிய வாய் ஓய்ந்து போனதே!

ஈழவேந்தன் என்ற தமிழினத்தின் விடுதலைக்காக அயராமல் சிந்தித்துக் கொண்டிருந்த அந்த அடங்காத் தமிழன் சிந்தைகள் இனி இயங்கப் போவதில்லை.

உறுதி குலையாத கொள்கையோடு முழங்கும் சமரசம் இல்லாத சண்டைக்காரனான ஈழவேந்தன் ஐயாவின் இழப்பு தமிழினத்திற்கு ஓர் இழப்பு.

கொள்கை பிழைத்த அரசியல் தலைமைகளாக வியாபாரம் செய்து நடமாடுகையில் உறுதியான தமிழீழ வேட்கை கொண்ட ஒருவரை இயற்கை அழைத்தது வேதனையே!

அன்னாரின் ஆத்மா சாந்தியடையட்டும். ஓம் சாந்தி!

## பாஜகவினரை…

11ஆம் பக்கத்தொடர்ச்சி

கடந்து அந்த சாதனையை முறியடித்தது.

### இவ்வளவு ஆதரவு இருந்தால் எதிர்ப்பும் இருக்கும்தானே;




2020ஆம் ஆண்டில், பாலிவுட் நடிகையும் பாஜக ஆதரவாளருமான கங்கனா ரணாவத்தின் அறிக்கைகளை விமர்சித்து விவாதிக்கும் காணொளியை ராதே வெளி யிட்டார். பதிலுக்கு ரணாவத், ராதேக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டியது குறிப்பிடத்தக்கது.

2022 செப்ரெம்பரில் பாகிஸ்தானின் அரசியல் நெருக்கடி குறித்து ராதே வெளியிட்ட காணொளியை இந்தியாவின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் முடக்கியது. அதில், இந்தியாவின் சிதைந்த வரைபடம் இருப்பதாகவும், அதில் காஷ்மீரின் சில பகுதிகள் பாகிஸ்தானின் பகுதியாக அல்லது ‘சர்ச்சைக்குரியதாக’ சித்தரிக்கப்பட்டுள்ள தாகவும் இந்திய அரசு கூறியது.
சல்மான் கான் தொகுத்து வழங்கிய இந்தி பிக் பாஸ் இரண்டாவது சீசனில், வைல்ட் கார்டு போட்டியாளராக ராதே பங்கேற்ப தாக வதந்திகள் பரப்பப்பட்டது. அந்தத் தகவலை மறுத்த ராதே, “கோடிக் கணக்கில் பணம் கொடுத்தாலும், என் வாழ்நாளில் பிக்பாஸ் போன்ற முட்டாள் தனமான நிகழ்ச்சிக்கு செல்லமாட்டேன் என்பதை தெளிவாகச் சொல்கிறேன். இந்த நிகழ்ச்சி சமூகத்தில் மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது” என்று விளக்கமளித்தார்.

தொடர்ந்து, துருவ் ராதே மனைவி ஜூலியை பாலியல் வன்கொடுமை செய்து விடுவோம் என அச்சுறுத்தல் அனுப்பப்பட்டது.

ஆபத்துகள் இருந்தபோதிலும் ராதே கலங்காமல் தொடர்ந்து காணொளிகள் வெளியிட்டுக்கொண்டே இருக்கிறார்.

### தமிழில் துருவ் ராதே


துருவ் ராதேவின் அரசியல் காணொளிகள் இந்தி மொழி கடந்தும் வரவேற்பு பெறத் தொடங்கியதை உணர்ந்து தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, கன்னடம் ஆகிய ஐந்து இந்திய பிராந்திய மொழிகளில் தனது மொழி மாற்ற காணொளிகளை வெளியிடுவதற்கான ஐந்து புதிய யூடியூப் சேனல்களை ஏப்ரல் 18, 2024அன்று ராதே தொடங்கியுள்ளார்.

தமிழில் ‘ஜெயிலில் அரவிந்த் கெஜ்ரிவால்! சர்வாதிகாரம் உறுதி செய்யப்பட்டதா?’ என்ற தலைப்பில் துருவ் வெளியிட்ட முதல் காணொளி 6 நாட்களில் 6 லட்சம் பார்வைகளைக் கடந்துள்ளது.

ஆப்பிரிக்காவில் வாழும் தமிழ் எழுத்தாள ரும் பன்னாட்டு நிறுவனம் ஒன்றின் உயரதிகாரியுமான பாலசுப்பிரமணியம் முத்துசாமி, “இச்சிறுவன் எனது முதல் குழந்தையைவிட இளையவன் என்பதே என்னை வியக்கவைக்கும் முதல் செய்தி. இந்தியாவில் 2024க்குப் பிறகு மக்களாட்சி நிலைத்து நிற்கும் என்றால், அதற்கு முக்கியக் காரணங்களில் துருவ் ராதேவும் ஒருவர் என உறுதியாகச் சொல்வேன்” என்கிறார்.

‘டைம்’ இதழ் 2023இல் வெளியிட்ட அடுத்த தலைமுறை தலைவர்களின் பட்டியலில் துருவ் ராதேவும் சேர்க்கப் பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.













# 25
## மொழிகளில் எமது சேவைகள்

வெளிநாடுகள் மற்றும்
கனடாவின்
பிற பகுதிகளிலிருந்து
ஒன்ராறியோவிற்கு (Toronto
உட்பட) வருபவர்களின் ஆதன
சிறப்பு தேவைகளை வாடகைக்கு
(நீண்ட காலம் மற்றும் குறுகிய
காலம்) பெற்று தர, ஆதனங்களை
வாங்குவதற்கு (purchase), தகுந்த
அறை நண்பரை (Roommate) பெற்று
தர தகுந்த ஆலோசனை பெற
எமது
நிறுவனத்தை அணுகவும்.

# Office Unit for Sale





**Don't miss the unit.**

**EXCELLENT OPPORTUNITY TO HAVE YOUR OWN OFFICE.**

*Please contact ...*

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969**

* Independently owned and operated.